தென்மொழி

# வாய்வீரம் பேசுகிறாய்!
# துயரில் பின் வாங்குகிறாய்!

உறங்கிக் கிடக்கின்ற
உணர்விலாத் தமிழனே!
இறங்கிப் போரிடாமல்
எதுவும் கிடைக்காது!
அறங்கெட்டுப் போனதிங்கே அரசு—ஆட்சித்
திறங்கெட்டுப் போனதென்று
தெளிவாய்த் தெரிந்த பின்னும்.... (உறங்கிக்)

மறங்கொண்டு போரிட்டால்
விளையும் எதிர்ப்புகளை
மனங்கொண்டே ஏற்காமல்
அஞ்சி மடங்குவதா?
முறங் கொண்டு புலியெதிர்த்த வீரம்—இன்று
தரங்கெட்டுப் போவதுவோ?
தமிழகத்தை மீட்காமல்.... (உறங்கிக்)

வாய்வீரம் பேசுகிறாய்!
துயரில்பின் வாங்குகிறாய்!
தாய்நாட்டைப் பார்க்காமல்
தன்னலத்தைப் பார்க்கின்றாய்!
நாயும்தன் உரிமைக்குப் பாடுபடும் — அங்கே
மாயும் தமிழர்களைப் பார்!
மற்றென்ன உன் கடமை?... (உறங்கிக்)

சுவடி : 24
ஓலை : 6

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா:2-00

Scanned with CamScanner

# நமக்கு வந்த மடல்கள்.

○ : *1300* : உயர்திரு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களுக்கு வணக்கம் ! *15-5-1988* அன்று வந்த ‘தமிழ்நிலம்’ இதழில் வந்த செய்திகள் கண்டு மிகவும் வருத்தப்பட்டேன். தாங்கள் தமிழ் மக்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் அல்லாமல், எங்கு எங்கு தமிழ் மக்கள் வாழ்கிறார்களோ அவர்களுக்கும் தொண்டு ஆற்றுவது கண்டு நான் பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி கொள்ளுகிறேன். இந்த இருபதாம் நூற்றாண்டுக் காலத்தில் இப்படியொரு பழந்தமிழ்ப் புலவர் போன்று எழுதுவது குறித்து எனக்கு மிக வியப்பாக இருக்கிறது... தாங்கள் உலகத்தமிழ் மக்கள் அனைவருக்கும் மென்மேலும் தொண்டாற்ற தமிழ்த்தாய் என்றென்றும் உங்களோடிருப்பாள். தங்கள் நீடிய நல் வாழ்வை விரும்பும்,

—இரா. இராபர்ட், லிட்டில் அந்தமான்.

○ :*1301*: மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். தாங்கள் ஆற்றிவரும் தமிழ்த் தொண்டைத் தமிழுலகம் என்றென்றும் மறக்க இயலாது. தமிழ்பால் தாங்கள் கொண்டுள்ள ஈடுபாடும் பெரு மதிப்பும் அளவிலடங்கா. தங்கள் தமிழ்ப் புலமையும் ஆழமான-நுட்பமான அறிவும் பாராட்டுக்குரியவை. அவ்வகையில் தமிழன் என்ற முறையில் யான் பெரிதும் நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

— வீர. சேகர். க.மு; மெய்.மு; ஆ. ப. இ. சென்னை-108.

○ : *1302* : பெருமதிப்புக்கும் பேரன்புக்குமுரிய ஐயா, வணக்கம். ‘தென்மொழி’ சுவடி 24 ஓலை 5. இதழில் திரு அருளி. அவர்களின் ‘‘இவை தமிழல்ல’’ என்ற நூலிலிருந்து பல சொற்களை எடுத்து வெளியிட்டிருந்தீர்கள். அதைப் படித்துக்கொண்டு வரும்போது எங்கே ‘தமிழ்’ என்று போட்டு ‘இதுவும் தமிழன்று’ என்று சொல்லி விடுவாரோ என்று அஞ்சினேன். நல்லவேளை விட்டுவிட்டார். தப்பித்தது தமிழ் ! அதற்காக அவருக்கு என் நன்றி.

அன்புடன், — அரு. கோபாலன், சென்னை-94.

○ : *1303* : பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். நீண்ட நாள்களாக நான் மடல் விடுக்காமைக்கு என்னைப் பொறுத்தருளுங்கள் ! தாங்கொண்ணாப் பற்பல இடையூறுகளுக்கிடையிலும் தாங்கள் தமிழ்ப்பணியைச் சிறப்பாக ஆற்றி வருகின்றீர்கள் ! தமிழ்த் தொண்டினுக்கே உங்களை முழுமையாக ஒப்படைத்து ஊண் உறக்கமின்றி உழைத்து வருகிறீர்கள் ! எந்த நிலையிலும் உரிய நிலையில் தவறாமல், உறுதியோடும் துணிவோடும் கடனாற்றும் தங்களைத் தமிழ்த் தாய்க்குக் கிடைத்தற்கரிய பேராற்றல் கொண்ட பெருமகனைக் கருதி உள்ளம் பூரிக்கின்றேன் ! தமிழ்க்குடி தலைநிமிரத் தங்கள் பணி இந்நாட்டிற்கு என்றென்றும் தேவையாதலால், தாங்கள் சீரிய நலத்தோடும் நேரிய வளத்தோடும் பன்னூறாண்டு வாழ்க என வாழ்த்தி மகிழ்கின்றேன். (தங்களை வாழ்த்தும் அளவுக்குத் தகுதி எனக்கில்லை எனினும், அன்பின் பீரீட்டால் வாழ்த்துகின்றேன்.)


(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்.)

Scanned with CamScanner



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]



தென்மொழி


மொழி—இனம்—நாடு.


**நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ்மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.


சுவடி 24] உ0கக கடகம் (சூன்-சூலை'88) [ஓலை 6


# தென்மொழி -- ஒரு சிந்தனை!



'தென்மொழி' என்னும் வரலாற்றுச் சிறப்புடைய இவ் விதழ் தொடங்கி 29 ஆண்டுகள் ஆகின்றன. இதழ் போதிய விளம்பரம் இன்றியும், இதழில் ஒரு சிறு வருவாய்க்குரிய விளம்பரமும் இன்றியும் இத்தனை ஆண்டுகள், தொடர்ந்து, பேரிழப் புகளுக்கும் பெருந் தொல்லைகளுக்கும் இடையில் இப்படி ஓர் இதழை நடத்திவருவது மிக மிகக் கடினமான முயற்சி.

இதை நடத்தி வரும் ஒவ்வொரு நாளும் என் நினைவுக்கு வந்து என்னை உறுதிப் படுத்தி ஊக்கந் தரும் திருக்குறள், 'அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்; பெருமை முயற்சி தரும்"— (611) என்பதேயாகும்! இத் திருக்குறளுக்குத் தென்மொழி நடத்துவதை விட வேறு சிறந்த எடுத்துக் காட்டை நான் வேறெங்கும் கண்டதில்லை. ஆனால் அதிலுள்ள பெருமை என்னும் சொல்லுக்குரிய பொருளை இன்னும் நான் உணர்ந்தவனில்லை. பெரிய துன்பம் என்பதுதான் அதன் பொருளென்றால் ஒரு வகையில் அது சரியாக இருக்கலாம்;

'தென்மொழி'யால் என் தனிப்பட்ட வாழ்க்கையே இல்லா மற் போய் விட்டது என்றால் அது மிகையாகாது. இவ்வாறான துன்பமும் துயரமுமான ஒரு கடினமான முயற்சியால் நான் பெற்ற பயன் என்ன என்பதை என்னால் கணிக்கவே முடியவில்லை. இன்றும் நான் கடனாளிதான். வீடற்றவன் தான்! அன்றாட வாழ்க்கைக்காரன் தான்! என்னால் என்னை நம்பியுள்ள என் துணைவியைக் கூட மகிழ்ச்சியாய் வைத்திருக்க முடியவில்லை. அவளுக்கென்று ஒரு சிறு நகையைக்கூட இன்றளவும் நான் வாங்கிக் கொடுத்தவனில்லை. அதுவன்றி என்னுடைய ஆறு பிள்ளைகளுக்கென்று, அவர்களுக்குக் கல்வி கற்க வைத்ததைத் தவிர, ஒரு சிறு செல்வத்தையும் தரவில்லை. நிலையில் அத்துணை இடும்பன். எண்ணத்தில் அவ்வளவு கட்டுக் கோப்பானவன்.

இத்தனைக்கும் தென்மொழி இன்றும் இழப்பில்தான் நடந்து வருகிறது. ஆண்டுக்கு ஐயாயிர உருபா இழப்பு. இவ்விதழ் மட்டுமின்றி நாம் நடத்துகின்ற தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் என்னும் இதழ்களுக்கு வேறு, இன்னும் கூடுதலான உழைப்பையும் பொருளையும் ஈடுபடுத்த வேண்டி உள்ளது. இத்தனை முயற்சிகளும் தமிழ்மொழி, தமிழின முன்னேற்றத்திற்காகவும், தமிழ் நாட்டு உரிமை மீட்புக்காகவுமே செய்யப் பெறுகின்றன. இம் முயற்சியை ஒட்டு மொத்தமாக அளாவி, இத்தனை வலிவுடனும் தெளிவுடனும் வேறு எந்த இயக்கமோ, தலைவர்களோ செய்யவில்லை என்பதை இதை உணர்ந்தவர்கள் உணர்வார்கள்! இப் பெரும் முயற்சிக்காக நம் வாழ்க்கையையே பணயம் வைக்க வேண்டியிருந்தாலும், இதனால் கிடைக்கும் பயன் பெரிய அளவில் இல்லையே என்பது பற்றித்தான் இப்பொழுது நாம் மீண்டும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இதுபற்றியெல்லாம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஒரு முறை தென்மொழியில் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதித் தென்மொழியை நிறுத்தி விடுவதாகக் கூறியிருந்தேன். அக்கால் உயர்திரு. சுப. மாணிக்கனார், குன்றக்குடி அடிகளார் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான அன்பர்கள், தென்மொழியை நிறுத்த வேண்டாம் என்றும், தொடர்ந்து நடத்தும் படியும் கேட்டுக் கொண்டார்கள். இவ்வாறான பல்வேறு வேண்டுகோள்களுக்கும் துணையுறுதிகளுக்கும் பின்னர், தென்மொழியினால் விளையப் போகும் எதிர்காலப் பயன்நோக்கி, அதைத் தொடர்ந்து நடத்துவதென்று அக்கால் முடிவெடுத்தேன். ஆனால், இன்று மீண்டும் அதுபற்றி மறு ஆய்வுசெய்ய வேண்டிய சூழல் வந்து விட்டது.

அண்மையில் நம் தென்மொழி அன்பர்கள் சிலரும் உ.த.மு.க. அன்பர்கள் சிலரும், சென்னை, கத்திபாரா, நேரு சிலை குண்டு வெடிப்புத் தொடர்பாகவும், கொடைக்கானல், தொலைக்காட்சி நிலையத் தகர்ப்பு முயற்சி தொடர்பாகவும், காவல்துறையினரால் தளைப்படுத்தப் பட்டுச் சிறையில் வைக்கப் பெற்றுள்ளனர் என்னும் செய்தி யாவரும் அறிந்ததே! இதனடிப்படையில் ஆங்

காங்கு நடந்த காவல்துறை உசாவல், ஆய்வுத் தொல்லைகளால் அஞ்சியும் அதிர்ச்சியும் கொண்டு பலர் தென்மொழி, தமிழ்நிலம் தொடர்ந்து படிக்கவும் விற்கவும் தயங்கி, அவற்றைத் தங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டாம் என்று மடல் எழுதலாயினர்.

இம் மடல்களில் நம்மைப் பெரிதும் வருந்தவும் நம்பிக்கை யிழக்கவும் செய்தன, இது போலும் மடல்களை யாரிடமிருந்து நாம் எதிர்பார்க்க வில்லையோ, எவரெவரை நாம் துணிவும் வீரமும் உள்ளவர்களாகக் கருதியிருந்தோமோ, அவர்கள், குறிப்பாக—நெய்வேலி, மின்பாறை, பழனி, திருச்சி, சோளிங்கபுரம், உளுந்தூர்ப்பேட்டை, இராசபாளையம், உடுமலைப்பேட்டை ஆகிய முகவர்களிடமிருந்து வந்த மடல்களே! அவர்கள் இன்றுள்ள சூழலில் இப்படி நடந்து கொள்வார்கள் என்று கனவிலும் நான் கருதியதில்லை.

இந்நிலையில்தான் தென்மொழி நிறுத்தம் பற்றி மீண்டும் நமக்குச் சிந்தனை எழுந்தது. இத்துணைக் கோழையுள்ளம் கொண்ட தமிழர்களிடம், தென்மொழியைக் கடந்த இருபத்தொன்பதாண்டுகள் நடத்தியும் யாதொரு துணிவையும் வீரத்தையும் விளைவிக்காமல் போன பின்னும், இனியும், இம்முயற்சியைத் தொடர்ந்து செய்வதால் என்ன விளைவை எதிர்பார்க்கப் போகிறோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டிய கட்டாய நிலை இது.

இதுவுமின்றித் தென்மொழியை விற்றுத்தரும் அன்பர்களாலும் முகவர்களாலும் நாம் படும் பாடு கொஞ்சநஞ்சம் அன்று. அவர்கள் பெரும்பாலும் விற்ற தொகைகளை அனுப்பிவைப்பதே இல்லை. பல முறைகள் நினைவுட்டினாலும் ஏதேனும் சாக்குப்போக்குகள் கூறி மழுப்பி விடுகின்றனர். இன்று வரை அவர்களிடமிருந்து வரவேண்டிய விற்பனை நிலுவைத் தொகை ஏறத்தாழ பதினாறாயிரம் உருபா ஆகும். எத்தனை முறைகள், எவ்வளவு—அன்பாகவும் கெஞ்சலாகவும் கடுமையாகவும் கேட்டாலும் அவர்கள் அந்நிலுவைத் தொகைகளை அனுப்புவதே இல்லை. பலவகை வலியுறுத்தங்களுக்குப் பின்னர் சிறு சிறு தொகைகளை மட்டும் அனுப்பி வைத்துவிட்டு, மீண்டும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் கடன் சுமையை ஏற்றி விடுகிறார்கள்.

இந்நிலையில் இவர்கள் அனைவரும் நமக்கு நல்ல நண்பர்களே! அருமைத் தமிழ்த் தொண்டர்களே! இனிய இனநல உணர்வாளர்களே! இந்தத் தன்மைகளே இவர்கள் மேல் நாம் வேறு கடுமையான நடவடிக்கை எதுவும் எடுக்கத் தடையாகவுள்ளது. இதன் பொருட்டாகவே இவர்களும் மிகவும் மெத்தனமாக — மிக மிக மொத்தனமாகவே இருந்து விட நேர்கிறது. என்ன செய்வது?

இந்த வகையில் வெளிநாடுகளிலிருந்து மட்டும் ஏறத்தாழ உருபா எண்ணாயிரத்துக்கு மேல் பட்டியல் நிலுவை வரவேண்டி

யுள்ளது. உள்நாட்டு முகவர்கள், நண்பர்கள் இவர்களிடமிருந்து ஏறத்தாழ உருபா பத்தாயிரத்துக்கு மேல் வரவேண்டியுள்ளது. இந்தத் தொகையின் சுமை நமக்கு மிகுதியானது; தாங்க முடி-யாதது. நம்மைத் தொய்வடையச் செய்வது; ஊக்கமிழக்கச் செய்வது.

ஏற்கனவே நமக்குப் பலவகையான சுமைகள் உண்டு. அரசு எதிர்ப்பு, காவல்துறைத் தாக்கம், செயல் இடர்ப்பாடுகள், ஓயாத உழைப்பு, உறுதுணையில்லாமை, அச்சக நலிவு, போதிய வலிவின்மை முதலியன. இத்துடன் இத்துணையளவு பொருள் இழைப்பையும் எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும்? இவற்-றைப் பற்றியெல்லாம் நம் அன்பர்கள் உணர்வதே இல்லை. நிலுவை பற்றி அலுவலகச் சார்பில் கொஞ்சம் கண்டிப்பாகவும் கடுமையாகவும் மடல் எழுதி விட்டாலோ, நம் மேல் வருத்தப் பட்டுக் கொள்ளும் அன்பர் பலர் உள்ளனர். அவர்கள் தாங்கள் வைத்திருக்கும் நிலுவைக்காக வருந்துவதில்லை. நாம் அது குறித்து நினைவூட்டி எழுதி விட்டோமே என்றுதான் மிகுதியும் வருந்துகிறார்கள். இ'து அவர்களுக்குப் போதுமான பொதுவுணர் வில்லாமையையே கட்டுவதாகும்.

இவர்கள் தென்மொழி, தமிழ்நிலம் போலும் இதழ்களை எதற்காக நடத்தி வருகிறோம் என்பதையே உணர்வதில்லை. இவற்றை ஏதோ வணிகத்திற்காக — ஊதியத்திற்காக — அல்-லது பெயருக்காக — புகழுக்காகவே நடத்தி வருவதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள் போல் தெரிகிறது. அண்மையில் வெங்கா ஊார், சிரிராமபுரம் முகவர்ஒருவர் எழுதியிருந்தார். தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்களை இனி விற்பனைக்கு அனுப்பி வைக்க வேண்டாம் என்று எழுதி விட்டு, அவர் எழுதுகிறார். 'இனி நட்பு முறையில் தொடர்பு கொள்வோம்; வணிக முறை யில் பிரிந்திருப்போம' என்று. அவர் 'வணிகம்' என்று, இவ் விதழ்கள் விற்பதைக் கருதியிருப்பதாக இவ்வரிகளைப் படித்த பின்தான் உணர்ந்து கொண்டோம். 'வணிகம்' என்ற ஒரு சொல், நம் தூய தொண்டுக்கு எத்துணை இழிவானது! எத்-துணைப் பெருமைக் குறைவானது; அருவருப்பானது — என்று அவர் இத்தனையாண்டுத் தொடர்பில் விளங்கிக் கொள்ளவில்லை போலும்! இத்தகையவர்களிடத்தில் இவ்விதழ்களை, இத்தனைப் பேரிழப்புகளோடும், பேரிடர்ப்பாடுகளோடும், இனியும் நடத்தி வருவதால் என்ன பயன் விளைந்து விடப் போகிறது?

ஏதோ, நமக்கு வணிக முறையில் பொருளீட்டத் தெரியாது என்று பலரும் எண்ணிக் கொண்டிருப்பார்கள் போல் தெரிகி-றது. அது சரியன்று, நமக்குப் பொருளீட்டவும் தெரியும்; வணிகம் செய்யவும் தெரியும்; ஆனால் நாம் ஈட்டப் போகும் பொருளையும், நாம் செய்யப் போகும் வணிகத்தையும் — அ'து எவ்வளவு மிகுந்த தொகையாக இருப்பினும் — எவ்வளவு பெரிய வணிகமாக விருப்பினும் — அவை எல்வர்வற்றையும்

விட, நாம் செய்துவரும் தமிழ்த் தொண்டும், முன்னேற்ற விரும்பும் தமிழின நலனும், உரிமை பெற முயலும் தமிழ்நாட்டு மீட்சியும் — பெரியன — பெரியன—மிக மிகப் பெரியன — பெருமை வாய்ந்தன!

பெருமை உடையவர் ஆற்றுவார், ஆற்றின்
ஆருமை உடைய செயல் (975)

— என்னும் திருவள்ளுவர் வாய்மொழிப்படியன்றோ நாம் இத் தொண்டை ஆற்றி வருகிறோம். இவற்றின் வேறுபாடுகளைப் பற்றிய உணர்வில்லாதவர்கள்தாம் — விளக்க மில்லாதவர்கள் தாம் — தெளிவில்லாதவர்கள் தாம் — நம்மைப் பற்றித் தவறான மதிப்பீடுகளைச் செய்து கொள்வார்கள்.

காணாதான் காட்டுவான் தான்காணான்: காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு. (849)

என்னும் திருக்குறள் இவ்வுண்மையைக் கட்டியங் கூறி நிற்கும். மேலும்,

எனக்கென எதுவும் இல்லை; — இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலை தவிர.

— என்று முன்னரே எழுதிக் காட்டியிருக்கின்றேன்.

தென்மொழியைத் தொடங்கும் போதே, பலர் என்னைப் பிழைக்கத் தெரியாதவன் என்று என் முயற்சியைக் குறை கூறினார்கள். நான் அப்பொது அவர்களுக்குச் சொன்னேன்: 'ஆம்! எனக்குப் பிழைக்க (பிழைசெய்ய)த் தெரியாதுதான்' என்று. ஆனால் இந்த இனத்திற்கே பிழைக்க (வாழ)த் தெரியாமல், இது, அடிமைப்பட்டு, அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறதே; உரிமை பெறும் உணர்வு கூட இல்லாமல், பசுந்தழையைக் காட்டினவன் பின்னே பாய்ந்து செல்லுகிற ஆட்டுக் குட்டி போல், இது பகைவரையும் நம்பிப் போய்க் கொண்டிருக்கிறதே! இதை எப்படி முன்னேற்றுவது? இதற்கு எப்படி உணர்வு கொளுத்துவது? இதன் குருதியில் எப்படிச் சூடேற்றுவது? இதற்கெப்படித் துணிவை — வீரத்தை உண்டாக்குவது? என்றுதான் இன்னும்— இருபத்து நான்கு மணி நேரமும் கவலைப் பட்டுக் கண்ணீர் வடிக்கிறது, என் நெஞ்சம்!

இப்பொழுது சொல்லுங்கள். உணர்த்தினாலும் உண்மை உணராத மக்கள்! ஆட்டத்தையும் பாட்டையும் கண்டு வாயை அங்காந்து கொண்டு அவர்களின் பின்னே சென்று அலமந்து கிடக்கும் மக்கள்! இவர்களை என்ன செய்வது? இப்படியே விட்டு விடுவதா? இல்லை இவர்களை ஈடேற்ற ஏதாவது நம்மால் முடிந்த முயற்சியைச் செய்வதா? என்ன செய்வது! எவ்வாறு செய்வது? எப்படிச் செய்வது? எவரைக் கொண்டு செய்வது?

இக் கேள்விகளை, காவல்துறை ஆய்வுக்கும், உசாவலுக்கும், அரண்டு கொண்டு, மிரண்டு போய், நாம் உண்டு, நம் குடும்பம்

Scanned with CamScanner

நூல் மதிப்பீடு : 5:

# செயலும் செயல் திறனும்.

-- மா. செ. தமிழ்மணி.

(பாவலரேறு அவர்களின் 'செயலும் செயல் திறனும்' நூல் வெளியீட்டு விழா கடந்த 16-3-88 அன்று, சென்னை, தேவநேயப் பாவாணர் நடுவண் நூலரங்கில் உயர் நெறி மன்ற வழக்கறிஞரும், 'செந்தமிழ் நூல் வெளியீட்டுக் குழு'த் தலைவரும் ஆகிய திரு நா. நல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் நூலை மதிப்பிட்டு அறிஞர் பலர் உரையாற்றினார்கள். அவ்வுரைகளில் ஒன்று இது. பிறரின் திறனாய்வுரைகளும் அவ்வப் பொழுது வெளியிடப்பெறும்.)

பாவலரேறு அவர்கள் மலை, ஆறு, உடுக்கள் போல் ஓர் இயற்கைப்பொருள். அந்தந்த இயற்கைப் பொருளிலும் இருவகைத் தன்மைகள் உண்டு; நன்மையும் உண்டு; நன்மை அல்லாதனவும் உண்டு. அவற்றைப் பயன்படுத்திக் கொள்வோரின் அறிவு, உணர்வு, தேவைகளைப் பொறுத்து அவ்வியற்கைப் பொருளின் பயன்பாடு அவர்களுக்கு அமையும்.

அதுபோல்தான் பாவலரேறு அவர்களைப் பார்ப்பவர்களும் தம்முடைய அறிவு, உணர்வுக் கேற்ப அறிய முடியும்.

இந்நூலை வெளியீடு செய்யும் நிகழ்வில் அவரின் அடிநிலைத் தொண்டர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளனர்.

அறிஞர்களோ, பிற ஆரவார வெளிப்பகட்டுக் காரர்களோ இடம்பெறவில்லை. ஏன்! ஐயா அவர்களைத் தகுதியிட அவரின்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

உண்டு என்று கருதி 'எதற்கடா இந்தத் தொல்லைகள் நமக்கு' என்று கருதித் தென்மொழியைப் படிக்கவும் வாங்கி விற்கவும் தங்களைத் தவிர்த்துக் கொண்டார்களே, அவர்களை நோக்கிக் கேட்கின்றேன், மிக அன்போடு! அவர்கள் சொல்லட்டும் இதற்கான விடையை!

தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களை விற்று விற்பனைத் தொகைகளை 50, 100, 200, 500, 1000 என்று நிலுவை வைத்துக் கொண்டு, அனுப்பாமல் என் தூய தொண்டுக்கு இடையூறாக நிற்கிறார்களே, நம் அன்பர்கள், அவர்களை நோக்கிக் கேட்கின்றேன், இக் கேள்வியை! அவர்கள் சொல்லட்டும், இதற்கான விடையை!

அந்த விடைகளைப் பார்த்துக் கொண்டு, அதற்கு மேல் நாம் இனி என்ன செய்வது என்பது பற்றி மீண்டும் எழுதுகிறேன்! என்ன, தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்களை நிறுத்துவதா? இல்லை, தொடர்ந்து நடத்துவதா? — விடை கூறுங்கள்!

Scanned with CamScanner

நூலை ஆய்வு செய்யத் தகுதியானவர்கள் அவரின் வழிநடப்போர் மட்டுமே தக்கவர்கள் என்ற உண்மையால்தான் இவ்வாறு அமைக்கப் பெற்றது என எண்ணுகிறேன்.

நூலைப்பற்றி கூறுவதானால் பிறப்பெடுத்த ஒவ்வோர் உயிரியும் செயல் செய்தே ஆக வேண்டும் என்ற பொதுக் கருத்தில் இருந்து மாந்த உயிர் ஆற்ற வேண்டிய செயல் முறை எவ்வாறு அமை-தல் வேண்டும் என்பதைமட்டும் இன்றி, ஏன் செயல் செய்ய வேண்டும் என்பதையும் சிறப்பாக விளக்கவே இந் நூல் செய்-யப் பெற்ற தென்னலாம்.

இதை இந்நூலின் பக்கம் 310-இல் பிறவிப்பயன் என்ற தலைப் பில் வலியுறுத்தி உள்ளதன்வழி உணரலாம்.

இப்படிப் பிறவிப் பயனை இற்றைத் தமிழர் பெறவேண்டு மெனில் ஐயா அவாகள் எக் கொள்கைக்காக போராடுகிறார் களோ அக் கொள்கைக்காக — தமிழக விடுலைக்காகச் சிலர் இப் போது முனைந்து புறப்பட்டுள்ளனர். அச்சிலர்க்கு — இளை ஞர்க்கு — உதவுவதே நம் பிறவிச் செயல் என்று உணர்ந்து செய லாற்ற விரும்புகின்றேன். வணக்கம். 0

நூல் மதிப்பீடு 6 — பாவலர். ப. எழில்வாணன்.

குலைகுலை யாகப் பூத்த
குலமேசெந் தமிழ்ப்பூக் காடே !
விலையிலை உன்மொ ழிக்கே !
விளைவுக்கும் வரலா றில்லை !
அலைஅலை யாகப் போனாய்,
அயல்நிலந் தேடி! அங்கே
இலைஇலை யாக வீழ்ந்தாய் !
இருப்பது கிளையொன் றேயாம் !

(கனிச்சாறு 3-ஆம் தொகுதி பக்கம்: 167)

அவ்வாறு இருக்கின்ற ஒரு கிளையையாவது நாம் காக்க வேண்டாமா? உயிர் கொடுத்தாவது காக்க வேண்டும் ! அவ் வாறு காப்பதற்கு உரிய வழிமுறைகள் வேண்டாவா? அந்த வழிமுறைகள், செயல்முறைகள், வினையறிவு ஏற்ற துணைவலிமை ஆகியன பற்றி வள்ளுவப் பாற்கடலில் ஆழ்ந்தெடுத்த அமிழ்த மாக நமக்கு விளக்கமாக வழங்குவதுதான் ''செயலும் செயல்-திறனும்'' என்னும் நூலாகும்!

''செயலும் செயல்திறனும்'' நூலைப் பாவலரேறு ஐயா அவர் கள் எழுதவில்லை என்று நான் சொல்லுவேன்! வள்ளுவப் பேரா சானின் உள்ளமே பாவலரேறு வடிவில் நமக்கு வாய்த்து எழுதி யுள்ளது என்பேன்! வள்ளுவரின் சிந்தனையே ஐயாவின் உருவில் செறிந்து நூலை வடித்ததென்பேன்! அந்த அளவுக்கு ஐயா அவர் களின் பேருள்ளமும் செறிந்த சிந்தனையும் அமைந்துள்ள

''உள்ளத்தை ஒளியாமல் உலகில் பதிக்கின்றேன் !
உலகுக்கு ஒளியாமல் உள்ளதைச் சொல்கிறேன்.
கள்ளத்தைப் பழகிடும் கணக்கெனக் கில்லை ;
காசுக் கெழுதிடும் கரவெனக் கில்லையே''

எனப் பாடும் பாவலரேறுவின் உள்ளம் எத்தகையது என்பது அப்பாடலின் மூலமே புலப்படுகிறது, அத்தகைய பெருந்தகை எழுதிய ''செயலும் செயல்திறனும்'' எத்தகைய பயன் நோக்கி எழுதப் பெற்றது என்பதை நாம் உணரலாம்!

இந்நூல் இளையவர், பெரியவர் அனைவருக்கும் வழிகாட்டும் வாழ்வியல் நூல் ஆகும். இந்நூலின் பயனென்ன என வினவின் சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்கள் குறிப்பிட்டுள்ளதையே விடையாகக் கூறலாம்! ''தம் உள்ள — மன — அறிவு நிலைகளை நலத்தோடும் வளத்தோடும் வலிவோடும் காத்து வளர்த்துக் கொள்ள வேண்டும் — என்று விரும்பும் நல்லுணர்வாளர் ஒவ்வொருவரும்—இதனை வாழ்வியல் வழிகாட்டி நூலாகக் கொண்டு இதனைக் கடைப்பிடித்து வந்து—உருப்பட்டு உயரலாம். இவ்வரிகளால் நூற் பயன் உணரலாம். செயலே உயிர் வாழ்க்கை: இவ்வுலகில் பிறந்தவர் எவராயினும் அவர் ஏதேனும் ஒரு செயலில் ஈடுபாடு கொண்டவராக — செயல்புரியவராக இருத்தல் வேண்டும். அதுவே உயிர் வாழ்க்கை. செயலற்ற வாழ்க்கை உயிரற்ற வாழ்க்கையாகும்! என்னும் உயர்ந்த மெய்ம்மத்தை இந்நூல் எடுத்து இயம்புகிறது. அதுவே இந்நூலின் நுழைவாயிலாகும்! உள்ளே உயிரோடு இயங்கும் கலைக்கோயிலையும் கண்டுகளிக்கலாம்.

அடுத்து செயல் பற்றிக் கூறுகையில் பெருமைக்குரியது — சிறுமைக்குரியது என்பவற்றைத் திருக்குறளில் தோய்த்துச் சுவையாக வழங்குகிறார் பாவலரேறு. அச் செயலுக்குரிய செயல்-திறன் பற்றியும் விளக்குகின்றார்.

எண்ணுதிறன் பற்றிக் கூறுகையில்,

''முதற்கண் விலங்குக்கும் நமக்குமுள்ள வேற்றுமைகளில் தலையாய வேற்றுமை ''எண்ணுதிறன்'' ஆகும். பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அறவே எண்ணுதிறன் இல்லையென்று சொல்லி விட முடியாது, ஆனால் அவற்றின் எண்ணுதிறன் ஓரளவுக்கு உட்பட்டதாகவும், அதற்குமேல் வளர்ச்சியற்றதாகவும் உள்ளது, மாந்தனின் எண்ணுதிறன் அவ்வாறில்லை. பறவை, விலங்கு-களைக் காட்டிலும் பன்னூறு மடங்கு எண்ணுதிறன் உடையவர்-கள் மாந்தர்கள்'' என்று செப்பமாக அரியதோர் உண்மையை அறிவியல் அடிப்படையில் ஆய்ந்துரைக்குன்றனர், பாவலரேறு அவர்கள்:

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு''

(தொடரும்)

# "பாவியக் கொத்து"
# -- ஒரு மனவியல் பார்வை

பாவலர் கடவூர் மணிமாறன் க.மு; ப.மு

பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுதிய நூல்களுள் 'பாவியக் கொத்து' என்பது ஒரு சிறந்த இலக்கியம். பாவேந்தர் பாரதி தாசனின் 'புரட்சிக்கவி', வீரத்தாய், சஞ்சீவி பர்வதத்தின் சாரல்-போல அமைந்த பத்துச் சிறு பாவியங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாவியமும் தனித்தனிக் கதையையும் தீர்வையும் கொண்டுள்ளன. வாழ்வில் நடந்த செயல்களையும் நடைபெறக் கூடிய நிகழ்வுகளையும் உட்கருவாகக் கொண்டு அன்றும் இன்றும் பல புதினங்களும் காப்பியங்களும் தமிழில் தோன்றி இலக்கியத் துறைக்கு வளம் சேர்த்து வருகின்றன. அந்த வரிசையில் பாவியக் கொத்தும் சில வாழ்க்கைத் திருப்பங்களை ஏற்படுத்திப் படிப்பினைகளை உணர்த்துகின்றன. அவற்றை மனவியல் நோக்குடன் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பலவகைப் பாவினங்களால் ஆன இச்சிறு பாவியத் தொகுப்பு நூல் 1962-இல் வெளியிடப் பெற்றது. அத்திப்பூ, காளாம்பி, குருடர் காதல், பறவைகள் மாநாடு, வில(ா)ங்கு, பெண்ணல்லள், மணல்திட்டு, பட்டமரம், நடுகல், வழக்குரை காதை—ஆகிய பத்துச் சிறு பாவியங்கள் இதன்கண் அடங்கியுள்ளன. 2329 பாடல் வரிகளைக் கொண்ட இந்நூலை அணி செய்யும் சிறந்த உவமைகளும் உருவகங்களும் கதைப் போக்குகளும் விரிந்த மனவியல் பார்வைக்கு இடம் தருகின்றன.

''ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் தமிழர்கள் தம் மொழி, இன, நாட்டுணர்வில் மழுங்கலுற்றுத் தேய்ந்திழியும் மானத்தைப் புதுக்கிக் கொள்ளவும், தம் வாழ்வியலிடைப் பல்வேறு அகப்புறத் தாக்கங்களால் தவிர்த்துச் சரிகின்ற பண்பாட்டையும் நாகரிகத்தையும் திறமுறுக் கேற்றிச் செப்பம் செய்து கொண்டு, நெகிழாது நின்று நேர்வழியைக் கடைப்பிடித்து, நடையிட்டு முன்னேறவும் தன்னைப் பயனுக்கிக் கொள்ளவேண்டியே இப் பாவியக் கொத்து இலங்குகின்றது என்பது தெளியத் துலங்குகின்றது''1 என்று இந்நூலின் நுழைவாயில் உரை நுவல்கின்றது.

''மாந்தன் பெற்றுள்ள ஒரு பெருஞ்சிறப்பு மன உணர்வாகும். மனத்தில் எண்ணும் எண்ணங்களே செயல்விளைவுக்கு அடித்தளங்கள் ஆகின்றன. செயல் விளைவுகள் மனத்தில் நினைவுகளாகப் பதிகின்றன. ஒவ்வொருவர் வாழ்விலும் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் இணைக்கும் இணைப்புத் தொடரியே இந்நினைவலைகள்தாம். நேற்றைய நினைவுகள் இன்றில்லை எனில் வாழ்வே துண்டிக்கப்பட்டது போலாகும். மேலும் ஒழுங்குமுறை தவறாத இயக்கம் ஒன்று அண்டங்களை முறைபிறழாது இயக்குவதுபோன்று, கண்ணுக்குத் தெரியாத மனமே ஒவ்வொருவரையும் காரண கருமியத் தொடர்போடு இயக்கி வருகிறது. ஆத

Scanned with CamScanner

லால் மாந்தரின் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டும் எனில் அவர்களை இயக்கும் கருவியாகிய மனத்தை நெறிப்படுத்த வேண்டும்.''2 என்பது பொதுவான அறிவுரை மட்டுமன்று. மனவியல் பார்வையின் தெளிவான வரையறையுமாகும். இந்த அளவு-கோலின்படி ஒவ்வொரு பாவியத்தையும் தனித்தனி நோக்கு வோம்.

அத்திப்பூ :—

இப்பாவியத்தில் கதைத்தலைவன், தலைவி, தலைவனின் நண்பன் முத்தப்பன் ஆகிய மூவருமே முகாமை உறுப்பினர்கள். தலைவன் தலைவியின் திருமணத்துக்குப் பின் கதை தொடங்குகிறது. முதலிரவில் தலைவி, கயவன் ஒருவனால் தான் கற்பிழந்ததைத் தெரிவிக்கிறாள். தலைவன் 'அக்கயவன் நானே' என்று தன் பிழை பொறுக்க வேண்டுகிறான். அதற்குள் அவ்விரவு கழிய மறுநாள் இரவுக்காக ஏங்கியிருந்த தலைவன் அவன் நண்பன் முத்தப்பனைச் சந்தித்து முதலிரவில் நடந்ததைக் கூறுகிறான். அவள் இறக்காமல் காக்க அப்பழியேற்றதாகக் கூறித் தலைவன் அழ, முத்தப்பன் அவன் காலில் விழுந்து 'அக்கொடிய செயலைச் செய்த கயவன் நானே' என்று கூறித் தன்னை மன்னிக்க மன்றாடுகிறான். முத்தப்பன் பிரிந்து செல்ல, தலைவன் வீடு வந்து சேர்ந்து மனைவியிடம் மகிழ்ச்சி நிரம்பியவனாக வாழ்கின்றான். இதுவே கதையமைப்பு.

''தித்தித்த நெஞ்சுணர்வால் தீயதையும் மன்னிப்போர்
அத்திப்பூ போல அறியார்க்கு அறியாராய்
வல்லார் ஒரு சிலரும் வாழ்கின்றார் இவ்வுலகில்''3

என்று 'அத்திப்பூ' போன்று அறியார்க்கு அறியாதவராக வல்லார் ஒரு சிலர் வாழ்வதைத் தலைவன் மூலம் இனம் காட்டுகிறார், ஆசிரியர். 'பிழை செய்தார், பிழை செய்யப்பட்டார், பிழையைப் பொறுத்து மறப்பார் ஆகிய மூவர் வாழ்க்கைக் கோணங்களும் ஒரு புள்ளியிற் கூடுமானால்... அப்புள்ளியில் எழும்பும் உணர்வலைகளை' இப்பாவியத்தின் காட்சிக் களமாக்கி இருக்கிறார் ஆசிரியர்.

காளாம்பி :

'அறிவு தழுவா வெற்றுணர்ச்சியைக் கொண்ட உள்ளம் குப்பைப் புழுதி போன்றது. எப்பொழுதாவது பொழியும் உணர்ச்சி மழையினால் அங்கு முளைக்கும் காளாம்பிகள் பிறர்க்கு அருவருப்பையும் ஏளனத்தையும் தருகின்றன. இத்தகைய காளாம்பிகளை முளையிற் கிள்ளியெறிவோர் அவ்வுணர்வுத் தீ அவிந்து, அறிவுப் புனல் சிலிர்க்குங்காலை தாம் செய்யவிருந்த தீய செயற்கு வருந்துவதும், அவ்வாறு செய்யாமல் தப்பி, ஒழுக்கம் காத்தமைக்கு உவப்பதும் கண்கூடாகக் காண்கிறோம். அத்தகைய வெற்றுணர்ச்சிக்குப் பழுதாகாமல் ஒழுக்கநெறி நின்றோர் உயர்ந்தோர்; ஏனையோர் விலங்குகளே ஆவர்.'

இளைஞனொருவன் புகைவண்டி ஒன்றில் ஏறி அமர்ந்த பொழுது எதிரே இவனால் காதலிக்கப் பெற்றவள் குழந்தை

Scanned with CamScanner

யோடும் அவள் கணவனேடும் இருந்ததைப் பார்க்கிருன்; அவளோ,

''பண்டை நிகழ்ச்சி பாவையை உலுக்க
நெஞ்சு பதைத்தாள் ; நெட்டுயிர்ப் புற்ருள்!
அஞ்சு மடமான் அரிமா முன்னம்
உடல் நடுங்கிடல் போல்'' 4

உயிர் நடுங்கி இளமையை இகழ்ந்து பழைய நிகழ்ச்சியை மறக்க முயல்கிருள். இந்நேரத்தில் உறங்கி வந்த கணவனின் தலை பல கணியில் பட்டுவிடப் பதைத்து எழுகிருன். அடுத்து வந்த நிலையத்தில் அவ்விளைஞன் இறங்கிக் கொள்ள ஒரு சொட்டுக் கண்ணீர் விடுகிருள் அவள். 'நிலை கலங்குவதேன் ?' என்று வினவிய கணவனுக்குத் 'தலையில் உங்கட்கு அடிபட்டுவிட்டதே' என்று விடையிறுத்துப் பழைய உணர்வுக்கு மீள்கிருள். உணர்வு தடுமாறிய நிலையிலும் இறுதியில் ஒழுக்கம் காத்து நெஞ்சில் உயர்கிருள் அவள்.

குருடர் காதல் :

காதலுக்கு விழியை விட மொழியும் மனவுணர்வுமே தேவையானவை. காதல் குருட்டுத்தனமானது என்பார் (Love is Blind), சேக்சுபியர். இளைஞனும் இளைஞையும் ஆகிய குருடர் இருவர் தம்முள் எழுந்த காதலுணர்வைச் சொற்களில் பரிமாறிக் கொள்கின்றனர். விழியுடையார் காதலினும் விழியிழந்த அவர்களின் காதலுணர்வு மெய்ப்பொருள் நிரம்பியதாக உள்ளது. சாவடியொன்றில் குருடன் ஒருவன் படுத்துறங்கச் சென்றபோது அவன் கால்பட்ட பெண்ணொருத்தி, 'என் போல் நீயும் கண்ணிழந்தாயோ?' எனக் கேட்பதில் தொடங்கிப் பின்னர் மலர்கிறது அவர்கள் காதல்.

''வீடென்று கூறுவதும் காடென்று சொல்லுவதும்
மாடென்றும் ஆடென்றும் மக்களென்றும் கூறுவதும்
கேட்டறிந்தாள் ; ஆனுலும் கேட்கும் மொழிகளுக்கே
ஏற்ற பொருள்களிவை என்னும்'' 5

திறமறியாக் குருடி செல்லியும் குருடன் முத்தனும் வாழ்வில் இணைகின்றனர். அவர்கள் வாழ்வில் சாதித் தடையோ, செல்வச் செருக்கோ, ஏற்றத்தாழ்வு பேசும் மொண்ணைப் பழக்கமோ, மூட வழக்கமோ இல்லை எனப் பாவியம் முடிகிறது.

பறவைகள் மாநாடு :

— இப்பாவியத்தில் பறவையினங்கள் வாயிலாக இந்திய ஒருமைப் பாட்டின் போலிமையை உருவகப் படுத்துகிருர் ஆசிரியர். 'மொழி அழிந்தால் இனம் அழியும்' என்பது முதன்மைக் கரு. இந்தி மொழியினராகக் கழுகையும், தமிழராகச் சிட்டையும் எடுத்துக் காட்டி இந்தி வல்லாண்மையைச் சாடுகிருர்.

Scanned with CamScanner

நடுகல் :

இறுதிப் பாவியங்களாகிய நடுகல்லும், வழக்குரை காதையும் கூட இந்தி எதிர்ப்பைக் கருவாகக் கொண்டவையே. நடுகல் பாவியத்தில் முத்தனும் முத்தழகியும் காதலர்கள். இந்தியெதிர்ப் புப் போரில் சிறைப்பட்ட முத்தன் முத்தழகிக்கு மடல் விடுகின் றான். அவளும் விடை மடலில்,

"நானும் தமிழச்சி ! என் குடியும் தொல்குடியே !
ஈனும் புலிக்குடும்பம் பெண்குட்டி ஈன்றாலும்
பூனையென் றாய் விடுமோ ? பூந்தமிழும் என்னுயிரே !"6

என்று குறிப்பிட்டு வீரத்தைக் காட்டுகிறாள். பின்னர் அவரும் மொழிப்போரில் ஈடுபட்டு ஓராண்டுக் கடுங்காவல் பெற்றுச் சிறை யினுள் உடல் நலிந்து இறக்கிறாள். இவள் இறந்ததனைக் கேள்வி யுற்று முத்தனும் இறக்கிறான். ஒரே கல்லறையில் இருவரும் துஞ் சினர். கல்லறை முன் உள்ள நடுகல்லில் 'நற்றமிழர் வாளும் மழுங்கியதோ ? வன்மறமும் சாம்பியதோ ? ஒற்றைத் தமிழ னும் இல்லாதொழிந்தானோ ?' என்ற பல வரிகள் பொறிக்கப்பட் டிருந்தன. வாழ்விலும் சாவிலும் ஒன்றான இணையரின் உணர்ச்சிக் கதை இது.

வழக்குரை காதை :

இப்பாவியத்தில் வேல்மார்பன் என்பவன் கதைத் தலைவன். இவன்போன்ற விறலோர் ஆயிரக்கணக்கானவர் இத்தமிழ் மண் ணில் எழுச்சிபெற்றால்தான் தமிழக விடுதலைப்போர் முற்றுப் பெறும் என்பதை வலியுறுத்துகிறது இப்பாவியம்.

"நாடும் நிலமும் நகரும் ஊரும்
வீடும் வித்தும் அவைதரு விளைவும்
எல்லாப் பொருள்களும் எல்லாப் பயன்களும்
எல்லார்க்கு மாகும் எனும்பொது உடைமை
வந்தே தீரும் வகையினை அறிவேன்" 7

என்று வேல் மார்பன் வழக்குமன்றத்தில் வீரமுழக்கமிடுகிறான். மொழியுணர்வை முறுக்கேற்றுவதாக இ'து அமைந்துள்ளது.

வில(ா)ங்கு :

மாந்தர் என்ற போர்வையில் விலங்கும் உண்டு ; விலாங்கும் உண்டு. எளியோரை வதைக்கும் வலியோர் விலங்காவர். நல்லவ ராய் நடித்துத் தீயராய் வாழ்வோர் விலாங்கு மீன் போன்றவர். இத்தகைய கொடியரை எதிர்த்துப் போராடி அவர்கள் தீமைக்கு அறத்தீர்ப்பை நாடும்பொழுது அவ்வறமும் தீர்ப்புமே அவர்க ளாகிவிடும் அவலத்தை இப்பாவியம் படம் பிடித்துக் காட்டு கிறது.

ஆசிரியை பொன்னம்மாளும் அவள் கணவனும் தனித்தனி ஊர்களில் அலுவல் பார்க்கின்றனர். கிழமைக்கு ஒரு முறை ஊருக்கு வந்து செல்கிறாள் பொன்னம்மாள். ஒரு நாள் இரவு பள்ளிக் காவலன், அவளின் கணவன் பள்ளியில் இருப்பதாகக்

கூறி அழைத்துச் செல்கிறன். அங்கு வேறொருவனைக் கண்டு திடுக்கிட்டாள். அன்றிரவு அவள் விருப்பத்துக்கு மாருக அவன் விலங்காகிறன். மறுநாள் வருந்தி வாடிக்கிடந்த போது அவளின் கணவன் வந்து பார்க்கிறன். நடந்ததைக் கூறி, மனம் தேறி அவ்வூர் அவையில் அறங் கேட்கச் சென்றபோது அங்கு தலைவனுக அவளைக் கெடுத்தவனே வீற்றிருந்தான் என்று கதை முடிகிறது. வேலியே பயிரை மேய்ந்த வெங்கொடுமையைப் பாவியம் எடுத்துரைக்கிறது.

பெண்ணல்லள் :

குடும்பப் பெண்கள் பலவகையினர். கணவன் வருவாயை எண்ணுது தம் உள்ளப் புனைவுகளையே பலர் விரும்புவர். சிலர் எவர் சொல்லையும் கேளார். சிலரைத் திருத்திவிடலாம். கணவனைவிடப் பெண் எளிதில் கொள்கையைப் புரிந்து கொண்டு இறுதிவரை அதனைக் கடைப்பிடிக்கிறள். யாவரினும் மேம்பட்டுச் சிறக்கிறள். அத்தகைய பெண் திருத்தப்படுவதற்கு முன்னும் பின்னும் கொண்டுள்ள மனவுணர்வுகள் இப்பாவியத்தில் சுட்டப்படுகின்றன.

உண்பதிலும் உறங்குவதிலும் பிள்ளைகளை ஒப்பனைகள் செய்து மகிழ்வதிலும் பொழுதைக் கழித்த தலைவி குடும்பநிலை அறியாது முத்துப் பதக்கமும் மோதிரமும் கேட்டபோது இன்றைய தமிழரின் இழிநிலையை எடுத்துக் கூறி அவளைத் திருத்துகிறன் தலைவன். அவன் பொருளுரையைக் கேட்டு மனம் திருந்திய தலைவியைப் 'பெண்ணல்லள்' பொன் என்று தலைவன் போற்றுவதாக இப்பாவியம் முடிகிறது.

மணல் திட்டு :

ஏழரை ஆண்டுக்கால இல்வாழ்வில் கயல்விழி மகப்பேறு இன்றி மனம் கவன்றிருந்தாள். அவள் கணவன் வெளியூர் சென்றபோது எதிர்வீட்டு இளைஞன் முத்தனின் காதலைப்பெற விரும்பிய நேரத்தில் பக்கத்துவீட்டுப் பாவை அவளது கற்புநெறியைப் பாராட்டிப் பேச, தன் எண்ணத்தை மாற்றிக் கொள்கிறள். அவ்விளைஞன் இல்லத்துக்கு வந்தபோது 'தம்பி வருக' எனக்கூற, அவனும் மனத்தூய்மை பெற்றுச் சென்றன் என்பது இப்பாவியக் கதை. மாந்த வாழ்வில் சில நேரங்களில் ஏற்படும் இழிந்த எண்ணங்கள் மேலோங்கி நிற்பதை ஆற்றிடையில் ஏற்படும் மணல்திட்டுகள் போன்றது என்கிறர் ஆசிரியர்.

பட்ட மரம் :

ஆசிரியர் கூற்று (கவிக்கூற்று) இப்பாவியத்தை இயக்குகிறது. இரவில் இருளில் கடலில் பாய்ந்து தற்கொலை செய்ய முயன்ற ஒருவனைத் தடுத்துக் காரணம் கேட்டபோது, உலகின் பல்வேறு இழிவு அழிவுகளால் மனம் வெதும்பி இம்முடிவுக்கு வந்ததாகக் கூறுகிறன். மனம் மாறி மாத்தமிழ்த்தொண்டு செய்யுமாறு அறிவுறுத்தியதை அவன் ஏற்றுக்கொண்டான் என்று பாவியம் முற்றுப்பெறுகிறது.

Scanned with CamScanner

ஏதாவதொரு கொள்கைப் பிடிப்புள்ள உள்ளங்களை உலகியல் அழுத்தங்கள் தாக்குவதில்லை. கொள்கையிலா வெறுமை உள்ளங்களை அவை தவிக்க வைக்கின்றன என்பதை இதன்வழி விளக்கியுள்ளார் ஆசிரியர்.

முடிவுரை :

பாவியங்கள் ஒன்றேனும் இலக்கிய நோக்கத்திற்காகவோ, குமுகாய மேம்பாட்டிற்காகவோ படைக்கப்படவில்லை என்ற குறை இந்நூலில் இல்லை. மாந்த வாழ்வில் இயல்பாக நேரும் மனக் கிளர்ச்சிகளின் பின்னணியில் அமையும் வாழ்க்கை மாறுதல்களை இச்சிறு பாவியங்களில் ஆசிரியர் கோடிட்டுக் காட்டி எச்சரிக்கிறார். கயமைகளைக் களைந்தெறியவும், நச்சுமனப்பான்மைகளைப் போக்கவும் மொழியுணர்வைப் புதுக்கவும் இப்பாவியங்கள் தூண்டுவனவாய் விளங்குகின்றன. சில அறிவுரைகளாகவும் சில படிப்பினைகளாகவும் அமைந்து கற்பார்க்குத் துணை செய்யும் என்பது உறுதி.

அடிக்குறிப்புகள் :

1. ப. அருளி, பாவியக் கொத்து, நுழைவாயில் உரை பக். 18
2. இந்திராணி மணியன், வள்ளுவர் கூறும் மனவளக்கலை (கட்டுரை) ஆறுவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், கோலாலம்பூர் நவ, 1987
3. பாவியக் கொத்து பக்கம் 33
4. ,, மேலது பக். 36
5. ,, மேலது பக். 46
6. ,, மேலது பக். 107
7. ,, மேலது பக்' 118

(குறிப்பு :- 1988 சூன் 7, 8 ஆகிய நாள்களில் திருச்சியில் நடைபெற்ற அனைத்திந்தியத் தமிழ் இலக்கியக் கழக இரண்டாம் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற ஆய்வுக் கட்டுரை.)

## இதழ் விற்கும் முகவர்கள், அன்பர்கள் கவனத்திற்கு

**தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு-** ஆகிய இதழ்களை விற்பனை செய்யும் முகவர்களாலும் அன்பர்களாலும் நாம் படும் தொல்லைகளுக்கும், அடையும் இழப்புகளுக்கும் அளவில்லை. அவர்கள் பட்டியல் தொகைகளைக் குறித்த காலத்தில் அனுப்புவதில்லை. சிலர் நிறைய நிலுவை வைத்திருக்கிறார்கள். சிலர் ஏமாற்றும் நோக்கத்துடன் தொகை விடுக்காமலும் எழுதும் நினைவூட்டு மடல்களைப் பொருட்படுத்தாமலும் உள்ளார்கள். இந்த மாத இறுதிக்குள் அவர்கள் தம்தம் நிலுவைகளை எச்சமின்றி விடுத்துக் கணக்கை சரிசெய்து கொள்ளவில்லையானால், அடுத்த மாதத் தொடக்கம் முதல் கட்டாயம் இதழ்கள் விடுப்பது நிறுத்தப் பெறுவதுடன் சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்பெறும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். **-அமைச்சர்.**

# வெற்றி நமதே!

பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு

தமிழ்நாட்டு விடுதலைக்குக் குரல் கொடுக்கும்
தன்னேரில் லாமறவர் ஒருவர், தாங்கள்!
அமிழாத உணர்வுடனே உரிமை பேணி
அஞ்சாமல் ஆர்த்தெழுந்த அரிமா, தாங்கள்!
உமியாகப் பதராகப் போனுர் இங்கே,
உருவான தலைவர் சிலர் எங்களுக்கு!
நிமிர்ந்தநடை தருவதுங்கள் துணிவும் வீறும்.
நிழலாகப் பின்தொடர்வோம் நாங்கள் உம்மை!

தன்மானப் புயலாக உருவெடுத்துத்
தமிழ்நாட்டு விடுதலைக்குக் களம்அமைத்துத்
'தென்மொழி'யைப் படைக்கலமுய்க் கொண்டு, தாங்கள்
தீரமுடன் போராடி வருதல் கண்டோம்!
தின்றுவிட்டுத் திண்ணையிலே தூங்குவோரே
தேசீயம் பேசிவெறும் வாயை மெல்வர்.
என்றென்றும் ஏலாத அடிமையென்னும்
இருளகற்ற முகிழ்த்த விடி வெள்ளி, தாங்கள்!

விடுதலைச்சூள் உரைத்தெழுந்து,ஓர் இயக்கம் கண்ட
வீரமறவர்,தாங்கள்! வடபுலத்தின்
கொடுமைகளை எதிர்த்துப் போர்க் கொடிபிடித்த
கொள்கைமறவர்,தாங்கள்! விரலசைத்தால்
தொடுப்பார்கள் உரிமைப்போர் துணிந்திளைஞர்!
தோலாத வீரத்தோள் புடைத்தெழுந்தே,
அடுகளத்தில் ஆண்மையினைக் காட்டி வென்றே
அந்தமிழ நாடுதனை மீட்பார் திண்ணம்!

வீண்மிரட்டல் விடுக்கின்ற ஆட்சியாளர்
வேண்டாத நடவடிக்கை எடுக்கின்றுர்கள்!
வேண்டுவது விடுதலையே! அதற்கு நாங்கள்
விலைகொடுக்க முன்வந்தோம்! வீரம் போற்றும்
ஆண்மையர்உம் தலைமையிலே அணிவகுப்போம்,
அஞ்சாமல் துணிவுடனே ஆர்த்தெழுந்தே!
காண்நமதே வெற்றியென்று கணித்துக் காலம்
கரவெண்ணப் பகைவருக்கு விடையளிக்கும்!

---


## தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
கொள்கைகள் அடங்கிய கிழமை இதழ்.

| | | | |
|---|---|---|---|
| தனியிதழ் | விலை | உரு. | 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | ,, | ,, | 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | ,, | ,, | 25-00 |

தொடர்புக்கு: தமிழ்நிலம், 5, அருணுசலத் தெரு, சென்னை-5

(32-ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலமக்கள் உணருமாறு, நான் அறிவுலகில், வெளிப்படும் போது, அய்யாவே, தங்களைப் போன்றே துறைபோகிக்கற்று, எவரும் விரல்நீட்டிக் குற்றஞ்சொல்லாத அளவிற்கு என்னைத் தகைமை செய்து கொண்டே, வெளிப்பட வேண்டும் என்ற கருத்துண்டு!! ஏகலைவனாகத் தங்களையும் தங்கள் கருத்துகளையும் வைத்துப் பயின்று வந்தேன்!

பாவேந்தரை மிக நன்றாக உணர்ந்தேன்! தாங்கள் பேருரையில் செந்தமிழ் அமிழ்தும் மாந்தினேன்! உங்கள் தொண்டு, உங்கள் எண்ணப்படியான நல்ல விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது என்பதை உணர்ந்தேன்! தங்களின் தொண்டும் செயற்பாடுகளும் தொடர்ந்து வழிவழியாக நடைபெற வேண்டுவது மிக மிகத்தேவை, என்பதையும் உணர்ந்தேன்! அங்ஙனம் நடைபெற்றால் உறுதியாக இத்தமிழ்க் குமுகாயம், இன, மொழி நலப் பண்பாட்டு வீழ்ச்சிக்கு முன் இருந்த நிலைபெறுவது உறுதியிலும் உறுதி — என்பதையும் உணர்ந்தேன்!!!... எனக்குத் தமிழ் உணர்வு கொளுத்திய பேராசானுக்கு நன்றி கூறியும், பேராசானின் நொடிப்பொழுது நிகழ்வுகளிலும், இறைவன் துணையாய் இருந்து இயக்கவும், துணைநிற்கவும் வேண்டி முடிக்கிறேன்!

அன்புநிறை — தமிழ்க்கனல்.

---

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

னின்ன சாதி மக்கள்தாம் தமிழினப் பெருங்குடி அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லியாக வேண்டும்.

தமிழ் பேசுபவர்கள் அனைவரும் தமிழினம் என்று சொல்ல முடியாது. எப்படி ஆங்கிலம் பேசுபவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்கள் இல்லையோ அதுபோலத் தமிழ் பேசும் அனைவரும் தமிழர்களாய் ஒருகாலும் ஆக முடியாது.

அப்படி என்றால் தமிழினம் எது? அவர்தம் சிறப்புத் தொழில்கள் என்னென்ன? ஏன் அவர்கள் அடிமைகள் ஆனார்கள்? சாதிகள் எங்கிருந்து வந்தன? தெலுங்கரும், கன்னடரும், மராத்தியரும் தமிழ் நிலத்துள் புகுந்துள்ளனரா?

இன்றைக்குப் பல்வேறு சாதிப்பிரிவுகளால் சிக்கித் திணறுகிறது தமிழகம்(தமிழ்நிலம்). இதை மாற்ற முடியுமா? இதை மாற்றாமல் உரிமை பெற்ற தமிழரசு காண்பது எவ்வாறு? இது போன்ற எண்ணங்களே என் நெஞ்சைத் துளைக்கிறது. இன்னும் ஐயா தங்கள் முயற்சி எதிலும் வெல்லட்டும்.

—வே பாண்டியரசன், சென்னை-7.

---

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். — அமைச்சர்

# இன்றுள்ள தமிழர்கள்!

நூல்: தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்;
ஆசிரியர் : பர்.க. ப. அறவாணன்.
விலை : 304 பக்கம். உரு 25/-
கிடைக்குமிடம்: ஐந்திணைப் பதிப்பகம்,
282, பைகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5;

1. சமற்கிருதம் தந்தை மொழியாகத் தொன்று தொட்டு இருப்பதனால், அதனை விட முடியாமல், தாய்மொழி தமிழ்மொழியாக இருப்பதனால் அதனையும் விடமுடியாமல், ஒருவகைத் தவிப்பு இந்தியப் பிராமணர்களிடையே இருந்து வருகிறது. இக் கட்டோ இன்றியமையாமையோ, தந்தை மொழியா தாய்மொழியா என்ற போராட்டம் நேரும்போது தலைமுறை காரணமாகப் பிராமணர் தாய்மொழியைப் பின்னுக்குத் தள்ளி விடுதலையும் காண்கிறோம்.

2. இந்திய ஆரிய இனத்தவரில் உடன் பிறப்பு இனத்தவரான ஐரோப்பியர், தாய்வழிக் குமுகத்தினர் அல்லர் என்பதும், தந்தைவழிக் குமுகத்தினரே என்பதும் கருதத் தக்கன. நாட்டைத் தந்தையார் நாடு என்று குறிப்பிடுவதே ஐரோப்பியப் பிரஞ்சுக்காரரின் மரபாகும். அதனைத் தாய்நாடு என்று குறிப்பிடுவது தமிழர் (திராவிடர்) மரபாகும். (பாரதி — தந்தையர் நாடு என்று குறிப்பிட்டது ஆரிய மரபையோ பிரஞ்சு மரபையோ பின்பற்றியது ஆகும்)

3. வேதங்களிலும் புராணங்களிலும் வரும் பல தெய்வங்களின் தேவர்களின் தொன்மீகம் (பூர்வீகம்) தெளிவில்லாமல் இருப்பது சிந்திக்கத் தக்கதாகும். தாய்வழிப் பிறக்காமல் கும்பத்தின் வழிப் பிறந்தார்கள் என்ற கதை இங்கு நினைக்கத்தக்கது. சான்றுப் பிராமணக் குலத்தின் முதல்வராகப் போற்றப்படும் வசிட்டரும், அகத்தியரும் குடத்திலிருந்து பிறந்தவர்கள் என்ற கதை கருதத் தக்கது. இந்திய ஆரியருக்கும், இந்தியப் பெண்களுக்கும் பிறந்ததையும், கரு சுமந்து பெற்ற இந்தியப் பெண்களின் பெயர்களைச் சொல்ல விரும்பாமையும் இது போன்ற கதைகளுக்குக் காரணம் ஆகும். கிருபர், துரோணர் சகுந்தலை, சீதை முதலானோர் பிறப்பு பற்றிய கதைகளும், உடலுறவு இல்லாமல் பார்த்த அளவில் ஆணின் கருநீர் விழுந்து பிறந்ததாகக் கூறப்படும் தேவ கதைகளும் பழைய கலப்பைக் காட்டும் வரலாற்று எச்சங்களோ!

இரிக்வேத முனிவர்கள் சிலர் ஆரியர்க்கு உரிய தந்தை வழியில் சுட்டப்படாமல் 'இவள் மகன் இவர்' என்று சுட்டப்படுவது எண்ணத் தக்கது. திராவிடத் தாயரையும் அவர்தம் பிள்ளைகளையும் வேறுபடுத்திக் காட்டவே இந்த மரபு பின்பற்றப்பட்டதாகக் கருதலாம்.

Scanned with CamScanner

4. தீர்க்க தமசு (நீண்ட இருள் என்று பொருள்) என்ற முனிவர் தாசர் குலத்தினள் ஆன மமதா என்ற பெண்ணின் மகனுவார். ஆரியர்கள் அக்காலத் திராவிடரைத் தசுயூக்கள்-தாசர்கள் என்று குறித்தனர்.

5. கவச அயிலூசர் என்ற முனிவர் தாசர் குலப் பெண்ணின் மகனுவார்.

6. கருநிறம் உடையவனைப் பார்த்த உடனேயே அவன் பிராமணன் அல்லன் என்று உசவாது முடிவு செய்யலாம் — என்று பாணினி இலக்கணப் பாடியத்தில் பதஞ்சலி முனிவர் குறிப்பர். ஆனால் பிரகதாரணிய உபநிடதம் குறிப்பிடும் வேத மாணவர் பற்றிய குறிப்பு அக்காலத்து நேர்ந்த கலப்பை புலப் படுத்துகிறது.

ஒருவேதம் பயிலும் வெண்ணிற மைந்தன், இருவேதம் பயிலும் மாநிற மகன், மூன்று வேதம் பயிலும் கருநிறப் புதல்வன் — ஆகி யோரை அடைவதற்கான கருத் தாங்கும் சடங்கு பற்றி அவ் வுபநிடதம் விளக்குகிறது. மாநிற, கருநிறப் பிள்ளைகளைத் திரா விடப் பெண்களோடு சேர்ந்து பெற்றனர் ஆரியர் என்பதை இது மறைமுகமாகக் காட்டுகின்றது.

மலையாளிகள்:

வடபுலம் வந்த ஆரியர்களும் அவர்களால் கலப்பின மக்-களாக உருவான பிராமணர்களும் தென்னிந்தியாவில் ஒரு கலப் பினத்தைத் தோற்றுவித்தனர். அக் கலப்பினமே மலையாளிகள் ஆவர். தென்னிந்தியாவில் ஏனைய பகுதிகளைவிடக் குளிர்ந்த தட்ப வெப்பமும் மிகுந்த வளமையும் உடைய, கேரளம் வட ஆரியர்களை ஈர்த்ததாதல் வேண்டும். குளிர்ந்த தட்ப வெப்பத் தில் இருந்த அக் காலத்துச் சேர நாட்டுத் தமிழர் ஏனைய பகுதி யினரைக் காட்டிலும் வெளுத்து இருந்தனர்.

சேர மண்ணின் வளம் அவ்வூர் மக்களின் உடலுக்கு வளப்-பம் ஊட்டி இருந்தது. தமிழ் நாட்டிலிருந்து மேற்கு மலைத் தொடர்களால் அன்றைய சேர நாட்டு மக்கள் பிரிக்கப் பட்டி-ருந்தனர். எனவே பாண்டிய நாட்டை ஒத்த செந்தமிழை அன்னோர், பேசாமல் சற்றே விலகிய தமிழ் வட்டார மொழி-யைப் பேசி வந்தனர். வெளியாரை — வெள்ளை நிறத்தாரை — வேற்று மொழியாரைக் கண்ட அளவில் வரவேற்று விருந்தோம்-பிப் போற்றும் இயல்பினரான சேரத் தமிழர்களுக்கு வட புல ஆரியர்தம் வரவு நல்வரவு ஆயிற்று. வந்த ஆரியர்க்கு வரவேற்ற சேரநாடு வெல்லக் கட்டியாயிற்று.

எனவே ஆரியமும் தமிழும் கூடிக் கலந்தன. ஆரியரும் திரா விடப் பெண்டிரும் கூடிக் கலந்தனர். அதன் விளைவாக மலை-யாளம் என்ற தமிழும் சமசுக்கிருதமும் கலந்த கலப்புமொழி தோன்றிற்று. கலப்பு இனமும் தோன்றிற்று. பரசுராமர் என்ற பார்ப்பனர் கேரளத்தைப் படைத்ததாகக் கூறப்படும் கதையும்

Scanned with CamScanner

இங்கு எண்ணத் தக்கது. மலையாளிகள் மலையாளத்தை விட, தமிழை விட, சமசுக்கிருதம் சிறந்தது என்று நம்பும் போக்கும் இதனை வற்புறுத்துகின்றது. தென்னிந்தியாவில் வடபுலத்து இந்தி மொழியை மறுக்காமல் வரவேற்கும் கேரளப் போக்கும் பண்டைய வரலாற்றின் தொடர்ச்சியே.

வட ஆரியரும் தமிழரும் (திராவிடமும்) உடல் உறவால் விரும்பிக் கலந்தனர் என்பதை இரண்டு மாந்தவியல் சான்று-களும் வற்புறுத்துகின்றன.

1. நாயர் குடும்பத்தில் திருமணம் செய்து கொண்ட ஒவ்-வோர் இளம் பெண்ணும், திருமணம் செய்த முதல் மூன்று நாள்களுக்கு முன்னும் நம்பூதிரிப் பிராமணர்களோடு உடலுறவு கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாக்கப் பட்டிருந்தது. திருவிதாங்கூர் அரச மரபினரைச் சேர்ந்த இளவரசி ஆனாலும் இதற்கு நெறிவிலக்கு இல்லை. நம்பூதிரி ஊரில் இல்லை எனில், உரிய நம்பூதிரி ஊருக்கு வந்து உடலுறவு கொள்ளும் வரை மணம் முடிந்த இளம்பெண் காத்திருப்பாள். அதுவரை மணப் பெண்ணும் மணமகனும் சேரும் உடலுறவு நிகழ்ச்சியும் (சாந்தி முகூர்த்தமும்) நிகழாது.

2. நம்பூதிரிப் பிராமணரிடையில் ஆண்களுக்குத் திருமணம் முடிப்பதில் ஒரு பழக்கம் கட்டாயமாகப் பின்பற்றப்பட்டு வந்-தது. நம்பூதிரிக் குடும்பத்தில் பிறந்த மூத்த ஆண் பிள்ளைக்கு மட்டுமே நம்பூதிரிக் குடும்பத்தில் பெண் எடுக்க வேண்டும். ஏனைய இளைய பிள்ளைகளுக்கு நாயர் குடும்பத்திலிருந்துதான் திருமணம் முடிக்கவேண்டும் என்பது அண்மைக் காலம் வரைக் கட்டாயமாக்கப் பட்டு வந்தது.

எனவே மேற்கண்ட இரண்டு சான்றுகளும் கேரளத்தில் எவ்வாறு ஒரு கலப்பினம் உருவாயிற்று என்பதைக் காட்டு-கின்றன.

பிற இனக் கலப்புகள்:

கி. மு. சில நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் நாட்டோடு கிரேக்கரும் உரோமரும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அன்னோர் நூற்றுக் கணக்கில் தமிழகத்தில் அன்று இருந்திருந்தல் வேண்டும் என்பதைக் காவிரிப்பூம்பட்டினத்தி-லும், மதுரையிலும் யவணர் குடியிருப்புகள் இருந்தன என்ற இலக்கியச் செய்தி உறுதி செய்கின்றது...... தமிழ அரசர்களின் அரண்மனைகளிலும் யவணப் பெண்டிரும் இளைஞரும் பலவகைப் பணிகளில் அமர்த்தப் பட்டிருந்தனர் என்றும் தெரிய வருகிறது.

கூணர் என்ற அயல் நாட்டினர் வடஇந்தியப் பெண்களோடு சேர்ந்து வாழ்ந்ததால் தோன்றித் தழைத்த இனமே. வீர இனமான இராசபுத்திர இனமாகும். இதைப் போலவே யவணர் சகர் என்ற சித்தியர், பகலவர் ஆகியோர் வழி இனக் கலப்பு நேர்ந்திருக்கக் கூடும் என்பர்.

Scanned with CamScanner

கி. பி. 9-ஆம் நூற்றாண்டுக்குப் பின் 13-ஆம் நூற்றாண்டு வரைச் செல்வநிலையில் இருந்த பிற்காலச் சோழர்கள். தெலுங்கு இனமான சாளுக்கியரிடம் மணவுறவு வைத்துக் கொண்டனர். தமிழ்க் குலத்துச் சோழ மன்னனுக்கும், தெலுங்கு குல சாளுக்கியப் பெண்ணுக்கும் பிறந்த குலோத்துங்கன் பிற்காலச் சோழ அரசை ஆண்டான்.

நாயக்கர் கால மன்னர்கள் தெலுங்கு நிலமான விசய நகரத்தில் இருந்து தமிழகம் போந்து மதுரையை ஆண்டவர்கள். அவர்தம் வீட்டு மொழியாகத் தெலுங்கு இருந்தது. அவர்கள் காலத்தில் தெலுங்கு நாயக்கர்கள், நாயுடுகள், பிராமணர்கள் கூட்டம் கூட்டமாகத் தமிழ்நாடு வந்து வாழ்ந்தனர். நாயக்க மன்னர்கள் அரசியல் நெறி கருதித் தமிழ்ப் பெண்டிரையும் மணந்தனர்.

பிற்காலப் பாண்டியர்கள் கடைசிக் காலத்தில் இசுலாமியர் படையெடுப்பு நிகழ்ந்தது. இசுலாமியர் பாண்டிய நாட்டைக் கொள்ளை அடித்தபோது பெண்கள் பலரின் கற்பையும் சூறையாடினர். அழகிய பெண்கள் பலரைக் கவர்ந்து சென்றனர். மதுரையில் தில்லி சுல்தான்களின் சார்பாளராக இருந்து ஆண்டபோது (இசுலாமியர்க்கும் தமிழ்ப் பெண்டிர்க்கும்) பல கட்டாயத் திருமணங்கள் தமிழ் நாட்டில் நிகழ்ந்தன.

ஐரோப்பியர் கேரளக் கள்ளிக்கோட்டை வழியாக மதுரைப் பகுதியைக் கைப்பற்றிப் பின்னர் தமிழகத்தையும் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். தொடக்கத்தில் வணிக நிமித்தம் வந்த போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் தம் நாட்டிலிருந்து ஏறத்தாழ 10,000 கற்கள் தொலைவை ஓராண்டுப் பயணத்தில் கடல் வழி கடந்து வந்தவர், தம்முடன் தங்கள் பெண்டிரைத் துணைக்கு அழைத்து வந்திருக்க இயலாது. எனவே, நீண்ட காலப் பிரிவும் தமிழ் நாட்டில் நெடுங்கால வாழ்வும் ஐரோப்பியரை உள் நாட்டுப் பெண்களுடன் உறவாட வைத்திருத்தல் வேண்டும். இதனால் தமிழ் நாட்டில் பரத்தை இனமும் கலப்பினமும் பெருகியிருத்தல் வேண்டும். ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பியர் வரவால் தான் பரத்தமை செழிக்கலாயிற்று என்பர் அந்நாட்டு மாந்தவியல் அறிஞர். தமிழ் நாட்டுக்கும் அது பொருந்தும்.

தாழ்வு மனப்பான்மை கொண்ட தமிழர் ஐரோப்பியரை உயர்ந்த இனத்தவராகக் கருதி அவரோடு உடலுறவு கொள்வதை உயர்வாகக் கருதினர் என்றே கொள்ளல் வேண்டும். இந்தக் கலப்பால் தோன்றிய ஆங்கிலோ இந்திய இனத்தை, ஆங்கில இனத்தோடு இணையாக வைத்து உயர்வாகக் கருதுவதும், அவர்கள் தமிழைப் பிழையாகப் பேசுவதையே பெருமையாகச் சொல்வதும் மேற்கண்ட கருத்தை உறுதி செய்கின்றன.

Scanned with CamScanner

கேட்கவும் ஏற்கவும் தயக்கமாக இருந்தாலும் உண்மைக் குறையைக் காணலும் காட்டலும் ஆராய்ச்சியாளரின் கடமைக ளாகும். இந்த அடிப்படையில் இயற்பகை நாயனரது வரலாற்றைப் பழங்குடி ஆய்வுப் பின்புலத்தில் நோக்குதல் வேண்டும். ஆப்பிரிக்கா, ஆத்திரேலியாப் பழங்குடிகள் சில விடத்தில் விருந்தாளியரை உயர்வாகக் கருதும் எண்ணமும், விருந்தாளிக்கு உணவை இட்டுப் புரந்து மகிழ்வது போல மனைவியை நல்கிப் பேணுவதும் வழக்குகளாக இருந்தன. இது போன்றே வெளிப்புலத்தினின்று வரும் விருந்தினரைத் தேவராக எண்ணும் வழக்கம் தமிழரிடம் இருந்தது என்பதைத் தமிழரிடம் இருந்து வரும் விருந்தோம்பல் நெறியும், விருந்தினரைத் தெய்வ தூதர்களாகக் காட்டும் பெரிய புராண நெறியும் சேர்த்து எண்ணத்தக்கவை.

வெளிநாட்டிலிருந்து வந்த ஆடவருடன் தமிழ்ப் பெண்கள் சேர்ந்து வாழ்ந்த கட்டாயத்தால் தமிழ் நாட்டில் கலப்பினங்கள் தோன்றின. அன்றியும் அயல் நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குக் கொண்டுவரப் பெற்ற பெண்களாலும் கலப்பினம் தோன்றிப் பரவியிருத்தல் வேண்டும். வேறு நாடுகளின் மீது படையெடுத்து வெற்றி கொள்ளும் போது, அந்நாட்டிலிருந்து அழகிய மகளிரைக் கவர்ந்து வருவது பண்டைய போர் நெறியாகப் பல இன மக்களிடமும் இருந்தது. அந்த நெறி கழகக் காலத் தமிழரிடமும் இருந்தது. வெற்றி பெற்ற சோழ மன்னர் வென்ற நாடுகளிலிருந்து மகளிரைக் கொண்டு வந்தனர். அம் மகளிர் தமிழ் மக்களால் ‘கொண்டி மகளிர்’ என அழைக்கப் பட்டனர். இக் கொண்டி மகளிரே பரத்தையராகவும் வாழ்ந்தனர். (மதுரைக் காஞ்சி 582-38). இத்தகு வழக்கம் தமிழரிடம் தொடர்ந்து இருந்து வந்தது என்பதைக் கலிங்கத்துப் பரணியும் எடுத்து மொழிகிறது. கலிங்கத்தை வென்று கருணாகரன் வெற்றி கொண்டு வரும் பொருள்களுள் ஒன்றாகப் பெண்களும் குறிக்கப் படுவர், (கலிங் 2-22). அன்னோர் ‘வடுகும் தமிழும் கலந்து குழறிக் குழறிப் பேசினர்’. இவர்களும் தமிழ் நாட்டில் கலப்பு இனங்கள் தோன்றுவதற்குக் காரணர்களாக விளங்கினர்.

நெல்லை, குமரி மாவட்டங்கள் பாண்டிய மன்னராலும் மலையாள மன்னராலும், மாறி மாறி ஆளப்பட்டன. இதனால் மலையாளப் பெண்களுக்கும் தமிழர்களுக்கும் உறவு ஏற்பட வாய்ப்பாயிற்று. இதில் மிகுதியாகத் தாக்குண்டது மலையாளிகளின் மிகுதியான ஆட்சியின் கீழ் இருந்த குமரி வட்டாரமாகும். மலையாளப் பெண்களின் கவர்ச்சியால் கலப்பு இனமும் கலவைப் பண்பாடும் குமரி மாவட்டத்தில் உருவாக நேர்ந்தன.

தமிழ்த் தேசியம் தமிழ் இனத் தேசியம் தமிழ் நாட்டில் விரிவாக வளராமல் போனமைக்குக் காரணம் கலப்பின மக்களே!

பண்டு தொட்டு அண்மைக் காலம் வரை, தமிழர், தூய ஆரியர், பிராமணர், கிரேக்கர், உரோமர், அராபியர், வட

Scanned with CamScanner

இந்தியர், இசுலாமியர், தெலுங்கர், மலையாளியர், கன்னடர்; சிங்களர், ஐரோப்பியர் — ஆகியோருடன் சேர்ந்து வாழ வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் நேர்ந்தது. அயல் புலத்தினின்று வெற்றியின் அறிகுறியாகக் கொணரப் பெற்ற கொண்டி மகளிரும் தமிழரோடு சேர்ந்து வாழ நேர்ந்தது. இதனால் ஆங்காங்கே கலப்பு இனங்கள் தமிழ் நாட்டில் தோன்றின. அவர்கள் அயலாரும் அல்லர்; தமிழரும் அல்லர். தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்தோர்; அவ்வளவே! பல சமையம் அவர் தம் தாய்மொழி தமிழாகவும், தந்தை மொழி வேறொன்றாகவும் இருந்தது. சில சமையம் அவர் தம் தாய்மொழி அயல்மொழியாகவும் தந்தைமொழி தமிழ்மொழியாகவும் இருந்தது.

இதனால் தமிழ்மொழி பற்றிய நெருக்கடியோ, இனம் பற்றிய நெருக்கடியோ நேரும்போது அவரால் முழு மனத்தோடு தமிழ் மொழியினராகவோ, தமிழ் இனத்தினராகவோ அந்த நெருக்கடியைத் தீர்க்கும் இயக்கங்களில் மேற்கண்ட கலப்பின மக்களால் பங்கேற்க முடியவில்லை. பங்கேற்கா விட்டாலும் தாழ்வில்லை; சில சமயம் தமிழ்மொழி, இன, தேசிய உருவாக்கங்களுக்கு அன்னாரே தடைக்கல்லாகவும் விளங்கினர்; விளங்கி வருகின்றனர்.*

கலப்பின மக்கள் யார் யார் என்பதையும் அவர்தம் பிறப்பு மூலத்தையும் மொழி, இன நெருக்கடி நேரும் சமையங்களில் அவர் நடந்து கொள்ளும் போக்கையும் சேர்த்து வைத்து ஆராய்ந்தால் தமிழ் மொழி இன வழித் தேசியத்திற்கு எவ்வளவு தடையாக இருந்து வருகிறார்கள் என்பது தெள்ளிதிற் புலனாகும்.

உலகத்தின் மூலை முடுக்கு எங்கும் கலப்பற்ற தனி இனம் குறைவு என்பது உண்மைதான். எல்லா இடங்களிலும் கலப்பின மக்கள் வாழ்கின்றனர் என்பதும் உண்மைதான். அதனைப் போலவே தமிழகத்திலும் கலப்பின மக்கள் வாழ்கின்றனர் என்பதும் உண்மைதான். ஆனால், இரண்டிற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. ஏனைய இடங்களில் கலப்பின மக்கள் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். சாய்காலின்றி இருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் கலப்பின மக்கள் சிறுபான்மையினராக இருக்கிறார்கள், ஆனால் பெருத்த சாய்காலுடன் இருக்கிறார்கள். எனவே அவர்கள் சாய்கால் (செல்வாக்கு) பெரும்பான்மைத் தமிழர் தம் போக்குக்கு முட்டுக் கட்டையாக நிற்கிறது.

ஒரு சிறப்புக் குறிப்பு.

பிற்காலச் சோழ மன்னர்கள் ஆயிரக் கணக்கில் அயல் நாட்டுப் பிராமணரை இறக்கு மதி செய்து, கோவில்களிலும், மடங்

---

* "— மண்டியிட்டால்
பெற்றவர்மேல் ஐயம்; பிறப்பின்மேல் ஐயமெனச்
சற்றும் தயக்கமின்றிச் சாற்று!" — என்னும்
பாவலரேறு அவர்களின் பாடலை ஓர்க.

# தமிழர் வாழ்வில் தாலி தேவையா?

-- திருவாட்டி: திருமுல்லை. கோலாலம்பூர்.

முன்னுரை :

ஒரு காலத்தில் நாகரீகம் என்று கருதப்படுவது, பின்னொரு காலத்தில் காட்டுவிலங்காண்டித்தனம் போன்றது என வெறுத்-துக் கண்டிக்கப்படுகிறது.

உடன்கட்டை ஏறுதல் முன்பு புனிதமானது; கடமை என்-றும் கூட கருதப்பட்டது. ஆனால் இன்று — உலகமே பழிக்கக் கூடிய கொடுமை மிக்க காட்டு விலங்காண்டித் தன்மையினதாகக் கருதப்படுகிறது. இருப்பினும் அவ்வழக்கத்தைக் கடைப்பிடிப் போர், அதைவிருப்புகின்றனர். அதற்குக் காரணங்களும், பெருமைகளும் கற்பிக்கப்படுகின்றன. நாம் அவற்றைக் கொடுமை முட்டாள்தனம் என்று கண்டிக்கின்றோம்.

தாலி கட்டுவதும், கணவன் இறந்தபின் அதை அறுத்துப் பூ, பொட்டு நீக்கிப், பெண்ணின் வாழ்வையே பொசுக்குவதும் — உடன் கட்டை ஏறுவதைவிட எவ்வகையிலும் குறைந்ததன்று.

முன்னவள் உயிரோடு எரிக்கப்படுகிறாள். தாலி அறுத்தவள் உயிரோடும் உடலோடும் துன்புறுத்தப்படுகிறாள். நாமும் 'மாங்கல்ய'த்திற்கு காரணமும் பெருமையும் காட்டுகின்றோம். நாகரீக உலகு நாம் செய்வதையும், கொடுமை முட்டாள் — தனம் என்றே கண்டிக்கிறது.

திருமணத்தில் தாலி கட்டுவதும், தாலி அறுப்பதும் பழந்-தமிழரிடையே இல்லாத வழக்கம். 500 ஆண்டுக் காலத்திற்குள் ளாகத்தான் இவ்வழக்கம் பரவியிருக்கிறது. இந்தக் தேவை யற்ற முரண்பாடான வழக்கமும், உடன் கட்டை ஏறுவதைப் போல் ஒழிக்கப்பட வேண்டியதே.

ஆடவர் இன்று கடுக்கண் அணிந்து, மிஞ்சி அணிந்து — தலை யில் குடுமி வைத்துத் திரிவதில்லை. மாற்றத்தை ஒரு — சாரார் மட்டுமே கடைப்பிடிக்க வேண்டும் என்பதில்லை. உண்மையை உணர்ந்து மாற்றம் பெறுவது நன்மையே பயக்கும்.

---

(முன் பக் த் தொடர்ச்சி)

களிலும் கல்வி நிறுவனங்களிலும் அமர்த்தினர். மன்னரும், மக்களும் புதிதாகக் குடி புகுந்த பிராமணர்களுக்குப் பொன்னை யும் பொருளையும் குடியுரிமைகளையும் வாரி வழங்கினர்.
விரிவிற்குப் பார்க்க:

பர். கே. கே. பிள்ளையின் தமிழக வரலாறு
— மக்களும் பண்பாடும். பக்கம் 298—302.

(தொடரும்.)

தமிழர் வாழ்வில் தாலி:

தாலி — 'மாங்கல்யம்' — மங்கல நாண் என்று அழைக்கப்படும் அணி, தமிழரின் திருமணத்தில் இன்றியமையாததாகவும், வாழ்வியலில் பெரும் பங்கும் பெறுகின்றது. இந்துக்கள் கிறித்துவர்கள், முசுலீம்கள் உள்பட எல்லாத் தமிழர்களும் — தாலி கட்டிக்கொள்கின்றனர். எனவே இது தமிழர்களின் — பரம்பரையான ஓர் அணிகலன் என்றே கூறப்படுகிறது.

திருமணம் ஆகிவிட்டதற்கு அறிகுறியாக, திருமணத்தன்று மணமகன் மணமகள் கழுத்தில் தாலியை 'அவள் திருமணம் ஆகிவிட்டவள் ; இனி அவள் தன்னுடையவள்' என்பதற்கு ஓர் அடையாளமாகக் கட்டிவிடுகிறார். ஆனால் அதே போன்ற கருத்தே மணமகள் கொண்டிருந்தாலும், தாலியையோ அது போன்ற — அடையாளத்தைக் காட்டக் கூடிய இலச்சினையையோ மணமகனுக்குக் கட்டுவதில்லை.

நேரம் காலம் யாவும் பார்த்துக் கட்டப்படும் இந்தத் தாலி, கணவன் இறந்துவிட்டால், சில கைம்பெண்களால் அறுக்கப்பட்டுப் பால் குடத்தில் இடப்படும். பின்னர் அவர் — 'விதவை' — கைம்பெண் ஆகிவிடுவார். கைம் பெண்டாட்டி, கம்மனாட்டி என்றும் அழைக்கப்படுவார்.

மனைவி இறந்துவிட்டால் தாலி கட்டப்படாததால் கணவனின் கழுத்திலிருந்து தாலி அறுக்கப்படுவதில்லை. அவரும் விதவன் என்றோ கம்மனாட்டன் என்றோ அழைக்கப்படுவதில்லை.

இது தமிழரின் நேர்மையான ஓரவஞ்சகமற்ற பண்பாடு — நாகரீகம் ஆகுமா?

தாலி தேவை என்று கூறுவோர் எவராயினும் அவர்கள் கருத்தினைத் தெளிவாக முன்வைக்கட்டும். தாலியை மறுப்பாரோடு, பட்டி மன்றங்களில் வழக்கிட்டுத் தாங்கள் மணவிழாவில் தாலி கட்டப்படவேண்டும் என்று கூறுவதற்கான தக்க கரணியங்களை மக்கள் முன் வைக்கட்டும்.

எவ்வளவுதான் பின்தங்கிய மக்களாக இருப்பினும் சிறிதளவாவது சிந்தித்து உண்மையைச் சிறுகச் சிறுக ஏற்காமல் — போக மாட்டார்கள் என்பது உறுதி.

தாலி என்பது என்ன?

தாலி என்பது ஆங்கிலத்தில் பெண்டன் எனப்படும் அணிகலனே தவிர வேறு எதுவும் இல்லை. பழந்தமிழர் தம் வீரத்திற்கு அடையாளமாகப் புலியின் பல்லை ஒரு கயிற்றில் — கோத்து தம் அன்புக்குரியோருக்கு அணிவித்தனர். அதுவே — தாலியின் தொடக்கமாகும்.

தாலி என்பது நாக்கு — நாக்கின் அமைப்பிலும் புலிவாய் போலும் நாக்கினோடு தொடர்புடைய பல்லாலும் — பல் போன்றும் செய்யப்பட்ட அணியே — தாலி.

''கொடும்புலி வாய் பிளந்து பெற்ற வெண்பல் தாலி'' என்பது பொருள் விளக்கமாகும்.

''புலிப்பல், தாலி புன்றலைச் சிறுர்', எனச் சிறுவர் அணிந்த தாலியைப் புறநானூறு கூறுகிறது.

''பொன்னேடு புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி'' என அகநானூறு இயம்புகிறது. இது சிறுமியின் தாலி.

சிறுவர் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தாலியணிந்திருந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன் சேர சோழர்களையும் குறுநில மன்னர் பிறரையும் போரில் வென்றபோது அவன் தாலி கழற்ருத இளையோஞக விளங்கினுன் என்பதை— ''தாலி களைந்தன்றும் இலனே'' என இடைக் குன்றூர்க்கிழார் என்ற புலவர் பாடுவதன் வழி அறிகின்ருேம்.

பழந்தமிழ் நாட்டில் சிறுவர் சிறுமியரும் தாலி அணிந்திருந்தனர். ஒரு குறிப்பிட்ட காலம் வரை அணிந்திருந்து பின்னர் அகற்றியிருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

தாலி வகைகள் :

இன்று சாதிக்கொரு தாலி வகை வந்து நம்மை நையுறச் செய்கிறது. ஆனுல் பழந்தமிழகத்தில் கீழ்க்காணும் தாலி வகைகள் இருந்திருக்கின்றன என்பது தெரிகின்றது.

புலிப்பல் தாலி — புலிப்பல்லால் ஆனது.

ஐம்படைத் தாலி — ஐந்துவகைப் படைக்கலன்களைச் சிறிய அளவாகச் செய்து கோக்கப்பட்டது.

பின் தாலி — முதுகை மறைக்கும் தாலி.

ஆமைத்தாலி — ஆமை வடிவினது.

மாணிக்கத்தாலி — மாணிக்கப் பரல்களால் ஆனது.

சின்மணித்தாலி — சின்ன மணிகள் கோக்கப்பட்ட தாலி.

மேற்கண்ட தாலி வகைகள் பழந்தமிழர்களால் அணிகலன்களாக அணியப்பெற்றன.

குதிரையின் தாலி :

உதயணன் கதையில் அவனுடைய குதிரையும் தாலி அணிந்திருந்தது என்பதை ''வலியுடை யுரத்தின் வான்பொற் ருலி''— என்ற செய்யுள் உணர்த்துகிறது. இன்று பெண்களால் பெருமை மிக்கது எனப்போற்றப்படும் தாலியைக் குதிரையும் அணிந்திருந்தது என்பதை எண்ணும் போது நகைப்பே எழுகிறது.

தாலி பண்டைய நாள்களில் அணியப்பட்ட ஓர் அணிகலன்; அழகுக்காக அணியப்பட்ட நகை என்பதைத் தவிர வேறு எவ்வகைச் சிறப்பும் அதில் இருந்ததில்லை. எனவேதான்—உதயணனும் தான் அன்போடு வளர்த்த குதிரைக்கு, அதை அழகு படுத்த தாலி கட்டியிருந்தான்.

தமிழர் மண வாழ்வில் தாலி :

தாலி திருமணத்தில் அணிவிப்பது இன்றியமையாதது. அது பழங்காலந்தொட்டு இருந்து வரும் வழக்கமாகும் எனக் கூறுவதும் அதற்கு ஏதேதோ பெருமை இருப்பதாக அறிவற்றுப் புலம்புவதும் இன்று நாடறிந்த பெண் எழுத்தாளர் சிலருக்கு—வழக்கமாகி விட்டது. பண்டைய நாள்களில் தாலி அணிவிக்கப்பட்டதா என்பதைச் சிறிது ஆய்வு செய்வோம்.

தமிழர் மணவாழ்வு களவியல் கற்பியல் என இரு வகைப்படும். இவை சீர்குலைந்து ஒழுக்கம் கெட்ட பின்னர்—''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப'' என்ற தொல்காப்பியர் கூற்று படி, ஐயர் (சான்றோர்—பார்ப்பனர் அல்லர்) சடங்கு முறைகளை வகுத்தனர். மணமக்களை மணல் பரப்பிய இருக்கையில் அமர்த்திக் குடத்தில் புது நெல்லும் மலரும் இட்டு நீர் நிறைத்து, அதை-மணமக்கள் மேல் ஊற்றி நீராட்டுவர். பெண்கள் குலவையிடுவர். விருந்துண்டலோடு மணவிழா முடிவுறும். இவ்வளவே.

இந்நாட்களின் வைதீகத் திருமணம் போல் மணமகளை வேசி என சபசுக்கிருதத்தில் போற்றும் மானமற்ற திருமண-வழக்கமோ-தாலிகட்டும் முறையோ-அன்றில்லை.

சிலப்பதிகாரம், 'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட, தீ வலம் வந்ததைக் குறிப்பிடுகிறது. கோவலன் கண்ணகிக்கோ மாதவிக்கோ தாலி கட்ட வில்லை. கோவலன் இறந்த பின் கண்ணகி தாலியறுக்க வில்லை. ஆனால் அவள் 'தொடி களைந்தாள்' என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். அதன் வழி தொடி எனப்படும் அணிகலனை அவள் நீக்கினாள் என்பதை அறிகின்றோம். இத்தொடியும் திருமணத்தன்று போடப் பட்டதற்கு அடிப்படை இல்லை.

ஆய் அண்டிரன் என்பவர் கடையெழு வள்ளல்களுள் ஒருவர். அவர் இல்லையென்று கூறுது அனைத்துச் செல்வத்தையும் ஏழை-களுக்கும் இரப்போருக்கும் வாரி வழங்கினார். -தம் மனைவியரின் நகைகளைக் கூட இழந்தார். அந்த ஆய்-மகளிர் ஒரே ஒரு நகையை மாத்திரம் சழற்றாது அணிந்திருந்தனர் என்பதை முடமோசியார் என்ற புலவரின் இப்பாடல் - வழி அறியலாம்.

''மஞ்ஞை கண்ணொடு சேப்ப
ஈகை அரிய இழையணி மகளிரொடு
சாயின்று — என்ப ஆஅய் கோயில் — புறம் 127.

புறம் 227-ஆம் பாடலில் கருங்குழல் ஆதனார் என்னும் புலவர், மாமன்னன் கரிகாலன் இறந்தபோது—

''மெல்லியல் மகளிரும் இழை களைந்தனரே''— என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்வழி மணமான மகளிர் இழையணி என்னும் அணியை அணிந்திருந்தனர் என்றும், துணைவன் இறந்தபின் அதனை நீக்கினர் என்னும் குறிப்பும், தெரியவருகின்றன.

Scanned with CamScanner

இந்த இழையணி 'மாங்கல்' யமன்று. திருமணத்தன்று அணிவிக்கப்பட்டதுமன்று என்பதை உரையாசிரியர்களின் கருத்தின் வழியும் அறிய முடிகிறது. துணைவன் இறந்த பின் நீக்கப்பட்ட இழையணி பாடிய புலவர் பெருமக்கள், வாழ்வின் முகாமை நிகழ்வான திருமணத்தில் தாலி கட்டப்பட்டிருந்தால் பாடாது விடுவரா ?

பெருமை(மகிமை) மிக்கதாகக் கூறப்படும் 'மாங்கல்யம்' மூன்று பெரும் 'தத்துவ' முடிச்சுகளோடு போடப்படும் போது பாடாது இருப்பாரா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

இழை, தொடி என்பனவற்றை அருங்கலம் என்றும் கூறுவர்; அருங்கலம் என்பது பரிசப்பொருளாக மணமகனால்-திருமணத்தன்று மணமகளுக்குத் தரப்படும் ஒரு பொருள் என்று பிற்பட்ட காலத்தில் பாடப்பட்ட பாடல் வழி அறிகின்றோம்.

12-ஆம் நூற்றாண்டில் அருங்கலம், பெற்றோர், அந்தணர், சான்றோர் முன்னிலையில் மணமகளுக்குத் தரப்பட்டதை

" கிழவோன்
அந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலந்
தந்து வரைதல் தகுதியென்ப" — என்ற பாடல்

வழி அறியலாம்.

தமிழரின் ஐம்பெருங்காப்பியங்களான வளையாபதி, குண்டலகேசி, சிலப்பதிகாரமும், சீவக சிந்தாமணி, மணிமேகலையும் மணமகள் தாலியணிந்ததாகக் கூறவில்லை.

தமிழரின் பொதுமறையான திருக்குறளில் தாலியைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லையென்பதை யார் மறுக்கமுடியும் ?

சீவக சிந்தாமணி 1, 000 ஆண்டுகளுக்கு முற்பட்டது: சீவகன் செய்யும் ஒன்பது மணங்களிலும் அவன் தாலி கட்டவில்லை;

சமணர்கள் என்போர் மகாவீரர் என்ற அறிஞரால் தோற்றுவிக்கப்பட்ட மதமான சமணமதத்தைச் சார்ந்தவர்கள்; மிக உயரிய கோட்பாடுகளைக் கொண்டு பிற உயிர்களுக்குத் துன்பம் தராத வாழ்வை மேற்கொண்டிருந்த இவர்களுக்குத் தெய்வ நம்பிக்கை இல்லை. நம் முன்னோர் பலர் சமணர்களாகவே வாழ்ந்திருந்தனர்.

தமிழ்த் தாயின் அணிமணிகளாகக் கருதப்படும் சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பன போன்ற - சமண நெறி நூல்களை இயற்றித் தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றினர்;

இந்தச் சமணர்களை மதுரையில் சைவரான திருஞானசம்பந்தர் வழக்கில் (வாதில்) வென்றாராம். அதன் தொடர்பாக மதுரையில் எண்ணாயிரம் சமணர்கள் கொலை செய்யப்பட்டனர்; தப்பி ஓடிய சமணர்களைக்கூட சூலம் தாங்கிய சிவனடியார்கள் விரட்டிப் பிடித்துக் கொன்றதாகச் சைவ சமய ஏடுகள் கூறுகின்றன.

Scanned with CamScanner

இந்தத் தமிழ்ச் சமணர்கள் ஒழிக்கபடாதிருந்தால் தமிழர் வாழ்வில் தாலி மட்டுமென்ன சாதியும் புகுந்திருக்குமா என்பது ஐயமே.

புராணத்தில் புகுந்த தாலி :

புராணக்கதைகள் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். நம்பவும் நடைபெறவும் முடியாத நிகழ்ச்சிகளை எல்லாம் விரிவாக அழகாக விளக்கி இருப்பார்கள். அருவருப்பான முறையில் உடலுறவுத் தொடர்பான கருத்துகளையெல்லாம் தெய்வங்கள் செய்தன வாகக் கூறி எழுதியிருப்பார்கள். இந்தப் புராணங்கள் தமிழரின் ஒழுக்கத்திற்கு மாறானவை. கேடு பயப்பவை. இப்புராணங்கள் மிகவும் பிற்பட்ட காலத்திலேதான் தமிழ் மக்களிடையே பரவத் தொடங்கின. புராணங்களில் புளுகுகள் மிக அதிகமாகக் காணப் படுவதால் இந்தப் புளுகு கந்தபுராணத்தில் கூட இல்லை' என்று தமிழ் நாட்டில் மக்கள் சொல்லுவார்கள்.

இப்படிப்பட்ட புராணங்களில்தான் முதன்முதலில் தெய்வங்களின் திருமணத்தில் தாலி கூறப்படுகிறது. 12ஆவது நூற்றாண்டில் கச்சியப்ப சிவாச்சாரியார் என்ற பார்ப்பனரால் எழுதப் பட்ட கந்த புராணத்தில் - ஆரியர் தலைவனை இந்திரன் தனக் குப் போரில் உதவிய சுப்பிரமணியனுக்கு (சு-பிரமண்யன் - பார்ப் பனர்களுக்கு நல்லவன்) தன் மகள் தெய்வயானையை மணமுடித் துத் தந்தான். அந்தத் தெய்வீகத் திருமணத்தில் தான் ''பிருமன் கருத்தால் செய்த தாலியைக் கரத்தால் வழங்கினன்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இதுவும் கூட ஓர் அணியாகக் கருதலாம்.

முருகன் காதற்கிழத்தியான வள்ளிக்குத் தாலி கட்டவில்லை. சிவனும் கூட பார்வதிக்குத் தாலி கட்டியதாகப் புராணக் கதை கூட இல்லை. எனவே இந்திரன் மகளுக்கு முன்பு கூறியதைப் போல் ஓர் அருங்கலத்தை நமது ஐயன் தந்திருக்கலாம் அல்லவா? தெய்வயானைக்கு அருங்கலம் தந்தவன் தமிழச்சி வள்ளிக்கு ஏன் தரவில்லை? வைப்பாட்டி என்பதால் என்றால் சரிதான்.

திருமாலின் தாலி :

திருமால் 'ஆமைத்தாலி பூண்ட அனந்த சயனன்' என பெரி யாழ்வாரால் பாடப்பெற்றுள்ளார். அவரே கண்ணன் தாலிக் கொழுந்தென்னும் கழுத்தணி பூண்டு மாடு மேய்க்கச் சென்றான் என்றும் பாடியுள்ளார்.

கண்ணனைக் காதலால் மணந்த ஆண்டாள் தாலி கட்டிக் கொண்டதாகக் கதையே இல்லை. கனவில் தன் திருமண நிகழ் வைக் கண்டதாக அன்றைய திருமண முறையை முழுமையாக வண்ணித்துப் பாடப்பட்ட ''வாரணம் ஆயிரம்'' என்ற பாடலை ஆண்டாள் பாடியதாகக் கூறப்படுகிறது. -அதில்

தேவர்கள் வந்து மணம் பேசுதல் ;
புத்தாடை உடுத்தல் ;

# வழக்குமன்ற நடவடிக்கைகளுக்குப் பொருளுதவி செய்யுங்கள்!

அண்மையில், எதிர்பாராத வகையில், நம் உ. த. மு. க. இயக்க அன்பர்களில் ஓரிருவர், கழக முதல்வரின் கருத்துக்கு மாறாகவும் நம் இயக்க நடைமுறைகளுக்கு வேறாகவும், செய்த சில தேவையற்ற செயற்பாடுகளால், நம் இயக்கத்திற்கு அரசினராலும் காவல் துறையாலும், பெரிய தாக்கம் நேர்ந்துள்ளது. அதற்கென அகத்தும் புறத்தும், எச்சரிக்கையாக, இயக்க நன்மையையும் எதிர்கால நிலைப்பாட்டையும் செயற்பாட்டையும் கருதி, சில வழக்கு மன்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டும், எடுக்க வேண்டியும் உள்ளன. அவற்றுக்கெனப் பல்வேறு வகையில் பொருட் செலவு நேர்ந்துள்ளது; நேரவும் இருக்கிறது.

அதனை மனத்தில் கொண்டு, **தென்மொழி, தமிழ்நிலம்** அன்பர்களும், உ. த. மு. க. ஆர்வலர்களும் தங்களால் இயன்ற பொருளுதவியைத் **தென்மொழி ஆசிரியர்** அவர்களின் பெயருக்கு நன்கொடையாக அனுப்பி உதவ வேண்டுகின்றேன்.

அன்பர்கள் இத் தொல்லையைப் பொறுத்துக் கொள்ளவும் கேட்டுக் கொள்கிறேன். அன்பன்

30-6-88. சென்னை — பெருஞ்சித்திரனார் — ஆசிரியர். தென்மொழி.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

நாத்தி அந்தரி மணமகளுக்கு மாலை சூடல் ;
மணமகளுக்குக் காப்பு நாண் கட்டுதல் ;
இசை முழங்கக் கண்ணன் கைப்பிடித்தல் ;
வேதமந்திரம் ஓத தீ வலம் வருதல் ;
அம்மி மிதித்தல் ;
கைமேல் கை வைத்துப் பொரி கொட்டுதல்;
வீதி வலம் வருதல் ;
மஞ்சனம் ஆட்டல் — முதலியவையே, உண்டு.

பெரியாழ்வார் காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டு என்பர். அன்றைய வைதீகத் திருமணத்தில் தாலி குறிப்பிடப் படவில்லை. இன்றைய வைதீகத் திருமணத்தை ஆச்சாரசீலர்கள் ஆண்டாளின் வைதீகத் திருமணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துச் சிறிதளவாவது தெளிவினைப் பெற வேண்டும். தாலி கட்டல் - தேவையின்றிப் பெண்ணடிமை காட்டவே புகுத்தப்பட்டதை உணர்தல் வேண்டும்.

(தொடரும்)

Scanned with CamScanner

# ஒருநாள் நிகழ்ச்சி!

*(கடந்த ஏப்பிரலில் நடந்த திண்டுக்கல் தமிழ்ச் சங்க நிகழ்ச்சியின் பொழுது, ஆசிரியருடனிருந்த, பாவலர் தமிழ்க்கனல் அவ்வொருநாளை ஆசிரியர் கழித்த வகை பற்றி இம்மடலில் எடுத்துரைக்கிறார். ஆசிரியரின் பொது வாழ்வில் இவ்வாறு எத்தனை எத்தனையோ நாள்கள். அன்பர்கள் அறிந்து கொள்ள இதனை வெளியிடுகிறோம்.)*

பேரறிவுப்பெட்டகம் — பேராசான் — ஐயா — நக்கீரப் பெரும் புலவர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்கு — அன்புநிறை இளவல் தமிழ்க்கனல் வரையுமன்பு முடங்கல். நலம்; சூழ விழைவது மஃதே!

இன்று சென்னை மாநகரை விட்டு — மீளவும் புறப்பட்டு — நாளை எழுகாலை சிதம்பரப்பட்டினத்தில் இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்! (27-4 88-அன்று நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்.)

இன்னும் என் கண் முன்னால் — பசுமையாக - திருச்சி பேருந்து நிலையத்தில் - திருவள்ளுவர் பேருந்தில் - சாளரம் ஓரமாக உட்கார்ந்து கொண்டுள்ளீர்கள்!... அதோ, பேருந்து புறப்பட்டு விட்டது! அன்புத் திருவுருவம்! - எனது அறிவுப் பேராசான் திருவுருவமும்...... சிறிது சிறிதாய் விலகி...... ஓ!...... மறைந்து மறைந்துபோய்...... என் நெஞ்சத்தின் உள்ளே ஆழப் பதிந்து போனது!

இனி மீண்டும் நான் என்அய்யாவைச் சந்திக்கும் வரை-என் மனவிருப்பப்படி எல்லாம் - எண்ண ஓட்டப்படி எல்லாம் அய்யாவோடு கொஞ்சுவேன்...... மகிழ்வேன்...... சிரிப்பேன்...... அய்யங்களைக் கேட்பேன்...... ஆதரவோடு கட்டிக்கொள்வேன்...... ஆரத் தழுவிக் கொள்வேன் - ... முத்தங்கள் முந்நூறு மூச்சுவிடும் முன்னே தருவேன்!

நலமாய் - இறையருள் துணைநிற்க 25-4-88 திங்கள் காலை சென்னை வந்திருப்பீர்கள் என்றாலும் - உடன் புறப்பட்டு மீளவும் பேருந்துலேயே அண்ணாமலை நகர் வரவேண்டியிருத்தலாலும் - அய்யாவின் பொன்னுடல் எவ்வளவு வருந்தும்! தொல்லைப்படும்! என்பதை எண்ணிப்பார்க்கிறேன் ......

இவற்றை எல்லாம் பொருட்படுத்தாது - தமிழ்க்குமுகாய விடியலுக்காகவே - இரவுபகல் பாராது -மெய்வருத்தம் பாராது- கண்தூங்காது - இத் தமிழ்நிலத்தின் மூலை முடுக்கெல்லாம் சுற்றிச் சுற்றிவந்து - உழைத்த சிந்தனையாளர் - தொண்டு செய்து பழுத்த பழம் - அய்யா பெரியாரைப் போன்றே - இத்தமிழ் மொழி - இன, நல விடியலுக்காவே தம்மை ஒப்புக் கொடுத்துக் கொண்டு - இத் தமிழ்நிலத்தின் மூலை முடுக்கெல்லாம், உடல் நலம், மற்றை எந்த நலங்களையும் எண்ணாது - பேருந்தோ, தொடர்வண்டியோ - எது கிட்டுகிறதோ அதில் எல்லாம் ஏறி - பயணம் செய்து - நெடுந்தொலைவு சென்று - கருத்துவிதைகளைத்

துவியும் - எதிர் கால உண்மைத் தமிழகத்தை அமைக்கவிருக்கும் நல்ல தமிழ் நெஞ்சங்களையும் - வீறுகொண்ட தென்மொழி ஆற்றல் மறவர்களையும், செயல் உரவோர்களையும் அணியப்படுத்தியும் வருகிற-இன்றைக்கு வாழ்கிற தமிழ்ப்பெரியராய்த் திகழ்கிறீர்கள்!

தம்பீ! தம்பீ! என்ற தங்களது அன்புக்குரல் இன்னும் செவிப்பறைகளில் - இனிய தமிழிசையாய் - ஒலிக்கிறது! தேன் பாகாய், கற்கண்டாய், சுவைக்கனியாய் இனிக்கிறது!

தங்குமிடத்தில், பலாச்சுளையை மொய்க்கும் ஈக்கள் போன்று மொய்த்து நின்ற அன்பர் கூட்டமும் - அவர்களின் நடுவே அமர்ந்து தாங்கள் உரையாடிய மாட்சியும் - கண்முன்னே பசுமையாய் உள்ளது!

நிகழ்வு முடிந்து - மீளவும் அறைக்குவந்து புறப்பட்ட போது இரவுமணி 9 அல்லவா!... மழைவேறு தூறலாய்த் தூறி-''திண்டுக்கல் தமிழ்ச்சங்கம் வந்து செல்லும் தமிழரசே! என் மகனே! சென்றுவா! வென்றுவா!! நீ இயற்கையை வெல்வாய்! இறைவனின் திருமகன் நீ! இத் தமிழ்நிலத்தை மீட்டெடுப்பாய்''... என வாழ்த்துக் கூறி பன்னீராய் மழைத் தண்ணீரைத் தெளித்து வாழ்த்தி வழியனுப்பிய காலை-.

கூடிஇருந்தோர் - தாங்கள் பேருந்துநிலையம் செல்வதற்கு இழுனை (ரிக்சா)வண்டி பார்க்க - ''நான் அண்மையில்தான் அய்யா... நடந்தே போகலாம்''... என்றதும் - தோளில் போட்டிருந்த சிறு துண்டை எடுத்துத் தலையில் போட்டுக்கொண்டு - புறப்பட முயன்று சாலையில் கால்பதித்த - பேராசானின் திருக்கால்களை என் கண்ணில் பதிக்கிறேன்.

அய்யாவே-பின்னர், வண்டி கிடைக்க - தாங்களும் ஈகையும் அமர்ந்துகொண்டு - தங்களது ஐந்து பைகளையும் உள்ளே வைத்துப்-புறப்படும் தறுவாயில் -''ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து'' என்று சிறு குழந்தை போல எண்ணியதும் - அந்த மெல்லிய குரலும் நெஞ்சத்தில் பதிந்தது.

பேருந்தில் அமர்ந்து, என் அறிவுப் பேராசான் அன்புத் திருவுருவத்துடன் உரையாடிக் கொண்டே திருச்சிவரை வந்ததையும் - அக்கால் திருக்கைகளால் தரப்பெற்றுத் தரப்பெற்றுத் தின்றுவந்த சிற்றுண்டிகளின் துணுக்குகள் ஒவ்வொன்றிலும் - கலந்து சுவைத்த அய்யாவின் பேரன்பால் இந்த உடல் ஓரடி நிமிர்ந்தது!

திருச்சிப் பேருந்து நிலையத்தில் - சென்னை செல்லும் திருவள்ளுவர் பேருந்தில் - ஓரமாய் அமர்ந்துள்ளீர்கள்!...... பேருந்து புறப்பட்டுவிட்டது...... என்அன்புத் தந்தை... அறிவுலகப் பெரு நெருப்பு தொலைவாய் - தொலைவாய் - சென்று விட்டதே!... ஆற்றாமை என்னைச் சூழ்ந்துகொண்டது!

நேற்று பள்ளியில் தேர்வு துவங்கியது! சிதம்பரம் நிகழ்விற்கு வரஇயலவில்லை!

Scanned with CamScanner

முருகே இறை என்ற வலிவான எண்ணமும் - அதைப் பேசுகிற திருக்கூட்டத் தம்பிரான்களும் - இறைச் சொத்துகளை தாமே தின்று ஏப்பம்விட்டுப் - பல்லக்கில் உலாவந்து கொண் டுள்ளார்களே தவிர - தமிழ்க்கடவுளான முருகனைத் தமிழ்கடவு ளாக நிலைநிறுத்தவோ - தமிழர் நெறியையும் - இறைத்துறையில் தமிழர்கண்ட உண்மைகளையும்-நெறியையும் உலகுக்குச் சொல்ல வேண்டும் என்றமுனைப்போ - நமது சமய நெறிமுறைகளோடு பின்னிப்பிணைந்து கிடக்கிற ஆரியப் பார்ப்பனர்களின் வேதாக-மச் சடங்கு முறைகளையும் - அவர்தம் புன்மை மொழியால் சொல்லப்பெறுகிற மந்திரங்களையும் நீக்கவேண்டும் என்ற, உணர்வோ - நமது செந்தமிழ்மொழி ஓசை திருக்கோயில் எல்லாம் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற மான உணர்வோ - சிறிதுமின்றி உறங்கிக் கிடைக்கின்றனர்!

முடங்கிக் கிடக்கும் வழக்கினை, உச்சநெறிமன்றில் தாங்கள் மீண்டும் தொடங்கி, தமிழகத் திருக்கோயில்களில் தமிழ்மொழி அரசோச்ச முனைவது குறித்தும், தாங்கள் மறுவழக்கினைப் போட்டுவைத்துப், அது தொடர்பான பணிகளில் இருப்பது பற்றி யும், இங்குள்ள தமிழ்ப் பண்டாரங்களுக்குச் சற்றும் கவலையில்லை! நெய்யும் பருப்புமாய்த் தின்று உடல்பருத்து, சற்றும் சுரணை யற்று இருக்கின்றார்கள்!

கடலூரின் யான் முதன்முதலாக (ஏறத்தாழ 20 ஆண்டுக ளுக்கு முன்) அய்யாவைப் பார்த்தபோது சற்று இளமையாக, சதைப்பிடிப்பாகவும் இருந்தீர்கள். இல்லத்தின் சாளரம் ஓர-மாக உட்கார்ந்து கொண்டு சாய்வு நாற்காலியில், அமைதியாய் அமர்ந்து, நுண்மாண் நுழைபுலத்துடன் கூடிய அறிவுக் கீற்றின் ஆயிரங்கோடி ஞாயிற்றின் ஒளி தெறிக்கும், விழிகளுடனும், அவற் றின் கூறிய நோக்குடனும், கொள்கை நோக்குக்கும், எண்ண அலை கட்குமிடையே, ஒரு 'மோன'த் தவகிருந்து 'ஞான' வேள்வி செய்து கொண்டு, இருந்த மொழி இனநலச் சிந்தனையாளரே! அந்தக்காட்சி இன்னும் என் மனக்கண்ணில் நீள விரிகிறது!!

அய்யாவே! அறிவே!! தாங்கள் உண்மையைக் கையில்ஏந்தி பொய்ம்மையைத் தூர எறிந்து, அறவாழ்க்கை மேற்கொண்டு, அறிவைத் தேடித்தேடிப் பெற்று, இன்று நக்கீரப் பெரும்புலவ ராய், இமயமாய் நிற்கிறீர்கள்! அதேபோலே யானும், எண்ணே அணியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுப், பயிற்சியும் அறிவும் சிறிது சிறிதாய்ப் பெற்றுவருகிறேன்.

அமிழ்ந்தும், ஆழமாயும், என்னுள் புதைக்கப்பட்டு, ஒளித்து வைக்கப் பெற்றுள்ள, பேருணர்வுப் பெரும் பிழம்பு, உறுதி-யாய்த் தென்மொழித் தொடர்பால், மிகக் குறுகியகாலத்தே பெருநெருப்பாய் வெளிவரும்!! அரிய செயல்களை செய்தே தீருப்!!

(தொடர்ச்சி -16 ஆம் பக்கம்)

Scanned with CamScanner

கடந்த 7.6.88 அன்று திருச்சியில்-பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கிலும், பின் 11.6.88. அன்று மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற 20-ஆவது கருத்தரங்க மாநாட்டிலும் நண்பர் திரு. மணிமாறன் அவர்களும், நானும் கலந்து கொண்டோம்.

மதுரைக் கருத்தரங்கில் 12.6.88. அன்று, மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழித் தொடர்கல்வித் துறைத் தலைவரும், பேராசிரியரும் முனைவருமாகிய திரு. இராம. சண்முகம் (தெ. பொ. மீ. அவர்களின் மருமகனார்) அவர்களின் தலைமையில் ''கனிச்சாறு ஊட்டும் மொழியுணர்வு'' என்னும் கட்டுரையைப் படித்தேன் என்பதனைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். கட்டுரை படித்து முடிந்ததும் வழக்கமாக அறிஞர் பெருமக்களின் 'வினாத்தொடுப்பு' நிகழ்ந்தது. உரிய முறையில் தங்களைப் பற்றியும், கனிச்சாறு பற்றியும், தனித்தமிழ் இயக்கம் பற்றியும் கேட்ட வினாக்களுக்கு விடையளித்து, அனைவரின் பாராட்டையும் பெற்றேன் என்பதனை அடக்கத்துடன் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதன் விளைவாகப் பலரும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு போன்ற இதழ்களையும், கனிச்சாறு போன்ற நூல்களையும் படிப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதனை அறிந்து மகிழ்ந்தேன். என்னிடம் இருந்த இதழ்களை அவர்களுக்கு வழங்கித் தங்களோடு தொடர்பு கொள்ளுமாறு கூறினேன் ! நிற்க.

'தமிழ்நிலம்' வழி இப்பொழுதைய நிலையை அறிந்து வருத்தமுற்றோம். தாங்கள் இதழ்களைத் தொடர்ந்து கொண்டு வருவதில் எத்தனைத் தொல்லைகளை ஏற்க வேண்டியுளது என்பதறிந்து உள்ளம் கவலுகின்றேன். எதையும் தாங்கும் அஞ்சா நெஞ்சுடன் இதையும் (இவற்றையும்) தாங்கி ஏறுபோல் வீறுநடையிட்டு இதழ்களைக் கொண்டு வருகின்ற இப்பேராற்றல் உங்களுக்கன்றி வேறெவர்க்கு வாய்க்கும் ?

புலவர். ப. எழில்வாணன். க.மு; கல்.இ; பள்ளபட்டி.

○ : 1304 : பேரன்பின் ஐயா அவர்களுக்கு வணக்கம்.

தமிழகம் அறிந்த மூவர்.

நேரிய பாதை நிமிர்ந்து நடக்குநர்
கூரிய அறிவினர் கொள்கைப் பிடிப்பினர்
சீரிய உரையினர் செந்தமிழ் எழுத்தினர்
கோட்டை இராவணன் தென்னவன் கோவே—

அன்பு முகத்தினர் அறிவார் உரையினர்
என்பும் தமிழ்க்காய் ஈயும் இயல்பினர்
எளிமை இசைமை இலங்கும் தொண்டர்
அருமைக் குழந்தை ஈக அரசனே—

நேச நோக்கினர் நேர்மை உளத்தினர்
பாச உறவினும் பைந்தமிழ்ப் பற்றுநர்
பேச இனியவர் பிறங்கும் அறிவினர்
ஐயா அவர்களின் மகனார் பொழிலனே—

இவர் தாம்,

தமிழ்க்கென உழைக்கும் தமிழ்த்தடங் கையரே !
தமிழ்க்கு முரணாய்த் தமிழர்க் கெதிராய்க்
குற்றம் இழைத்தரோ ? சட்டம் சிதைத்தரோ ?
சிறைசெயப் பட்டதாய்த் தேட லுறுவதாய்ச்
செய்தித் தாள்கள் 'எய்'யென் றெழுத

Scanned with CamScanner

உறவினர் புலம்பவும் ஊரார் பேசவும்
தமிழகம் அறியும் தறுகணுற் ருரே !
தங்களன்புள்ள, — த. அன்பழகன், மஞ்சள்நீர்க் காயல்.

○ : 1305 : பேரன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய உலகத் தமிழினக் காவலராம் எங்கள் அன்பு அய்யா அவர்களுக்கு. உங்கள் அன்புத் தொண்டன் கரிகாலன் வணக்கத்துடன் வரையும் நன்மடல். சிலநாள்களாக நடுவண் இந்தி(ய) அரசு தன் நஞ்சு மிகுந்த கொடிய பார்வையைத் தங்கள் மீது திருப்பி (C.B.I.) மூலமாக உங்களை உசாவுவதும் ஓயாத தொல்லைகள், நெருக்கடிகள் தருவதும், தமிழர்களின் போர் வாளாகவும் கேடயமாகவும், தமிழர்களின் விடுதலைக் கருவிகளாகவும் விளங்கும் 'தென்மொழி, தமிழ்நிலம்' ஆகிய இதழ்களைத் தடைப்படுத்திடவும், தமிழகம் முழுவதும் தமிழக விடுதலை மறவர்கள், தென்மொழி அன்பர்களை உசாவல் என்ற பெயரில் தளைப்படுத்துவதும். துன்புறுத்துவதும், அச்சுறுத்தி, விடுதலை மறவர்களின் தமிழ் நில விடுதலை உணர்வுகளை அழித்திட முயல்வதும், நாளேடுகளில் படித்துப் பதைத்துப் போனேன்.

வரலாறு தெரியாத மூட அரசு இந்தி(ய) அரசு ! வேறு எந்த அரசும் வேறு எந்த நாட்டின் தேசிய வினத்தின் விடுதலை உணர்வு மிக்க தீவிர இயக்கங்களை ஒடுக்கி விட்டதாகவோ, நசுக்கி விட்டதாகவோ, அழித்து விட்டதாகவோ வரலாறு கிடையாது.

'பாசிச' அடக்கு முறையில்தான் அதன் வேகம் மிகுந்த விடுதலை உணர்வுகளின் வளர்ச்சி ஏற்படும். தமிழர்களின் இருண்ட காலம் எனக் கூறப்படும் கி.பி. மூன்ரும், நான்காம் நூற்ருண்டில் களப்பிரர் ஆட்சியில் தமிழர்கள் வடவர்கள் ஆட்சியைத் தமிழ்நாட்டிலிருந்து ஒழித்திட, அரசு அதிகாரிகளைத் தாக்குவதும் அரச குடும்பத்தினரைக் கொல்ல முயல்வதும், அரசுக் கருவூலங்களைத் தாக்கிக் கைப்பற்றுவதும், வடவர்களை மறைந்து தாக்கி அழிப்பதும், வடவர்களின் ஆட்சியை ஒழித்திட தமிழர் விடுதலைப் படை உருவாக்குவதும் போன்ற நாட்டுப் பணிகள் அன்றே நடந்துள்ளன. அதனுடைய மறுபதிப்புத்தான் இன்று தமிழர், தமிழ் நிலத்திலிருந்து இந்தி(ய) அரசை விரட்டிட ஆங்காங்கு நடத்தி வரும் நாட்டு விடுதலைக் கிளர்ச்சியுமாகும். தமிழர்களின் விடுதலை உணர்வுகளை இந்தி(ய) அரசினுல் என்றுமே அழித்திட முடியாது. இன்னும் மூன்று, ஐந்தாண்டுகளில் இந்தி(ய) அரசை தமிழ் நிலத்திலிருந்து முழுவதுமாகத் துடைத்து விடத் தான் போகிருர்கள். இது உறுதி. வாழ்க தமிழ், வெல்க தமிழ் நாட்டு விடுதலை ! வணக்கம். இப்படிக்கு,

—தென்மொழி கரிகாலன். வ. ஆ.

○ : 1306 : வணக்கத்திற்குரிய ஐயா பாவலரேறு அவர்கட்கு, தமிழர் அனைவரும் பொருளியலிலே சிறப்புற்று வளமடைந்து தனிநாடு கண்டு உரிமையோடு வாழவேண்டுமென எண்ணுகின்ருேம்.

இவ்வெண்ணத்திற்கு முதலில் குறுக்காக நிற்பது சாதி உணர்வு. சாதிகள் எவ்வாறு ஏற்பட்டன என்பதற்கு ஒரு தெளிவான வரையறை ஏற்பட்டாலன்றி தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட முடியுமா ? ஒரு தெளிவான ஆராய்ச்சி முடிவோடு இன்

(தொடர்ச்சி -16ஆம் பக்கம்)